தென்மொழி

உள்ளச் சிதைவுகள்!

உள்ளத்தால் நலிந்துள்ளேன்; உடலாலும்
மெலிந்துள்ளேன்; உறவோர் போலும்
கள்ளத்தால் இயங்குகின்ற—கனிவாக
நடிக்கின்ற—கரவு நெஞ்சர்—
கொள்ளத்தான் இயலாத கொடுமைகளைச்
செய்கின்றார்! குடும்பம் என்னும்
தள்ளத்தான் முடியாத தடஞ்சுமையும்
தோள்அழுந்தத் தளர்கின் றேனே!

அறிஞர்களைப் பேணாத அழிவரசும்,
ஆள்கின்ற அமைச்சர் தாமும்
வெறிஞர்களைப் போல்,பயனில் வீணர்களைப்
போல்—வெற்று வினைகள் செய்வார்!
வறிஞர்களாய் உழைப்பவர்கள் வாடிநிலை
குலைகின்றார்! வரும்பொ ருள்மேல்
குறிஞர்களாய் ஆட்சியினர் கொள்ளையிடு
வதுகண்டும் குமைகின் றேனே!

மக்களெல்லாம் வழிமாறி மாண்பிழந்தே
எதைச்செயவும் மனம்து ணிந்தார்!
தக்கபடி அன்னவரைத் தகும்வழியில்
செலுத்தவும் ஓர் தலைவ ரில்லை!
வக்கில்லை; என்போலும் வருந்துவர்க்கும்
வழியில்லை; வாய்ப்பும் இல்லை!
திக்கறியா நெடுங்கடலுள் சீறுபுயல்
சுழல்மணலாய்ச் சிதைகின் றேனே

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 25
ஓலை : 10

விலை:
உருபா: 2-00

நமக்கு வந்த மடல்கள்.

○ : *1419* ; அன்புமிக்க பாவலரேறு ஐயா,

வணக்கம்; அண்மையில் நான் ஒரு திராவிடர் கழகப் பொறுப்பாளரின் மகள் திருமணத்திற்குச் சென்றிருந்தேன். மணமகனும், மணமகளும் தமிழ்நாட்டில் பிறந்தவர்கள்; வளர்ந்தவர்கள்; இருவருமே கல்வியில் பட்டம் பெற்றவர்கள். மணமகன் அமெரிக்காவில் கணிப்பான் பொறியாளராகப் பணி-யாற்றுகிறார்; மணமகள் தமிழ்நாட்டி லிருக்கிறார்.

இவர்களுடைய திருமணம் தன் மதிப்பு மணமாக நடந்தது. திராவிடர்கழகப் பொறுப்பாளர்கள்தாம் முன்னின்றுத் தந்தை பெரியார் அறிவித்த வாழ்க்கை ஒப்பந்த உறுதி மொழியைப் படித்துக் காட்டி மணவிழாவை நடத்தி வைத்தனர். மணமகனை வந்தோர்க்கு நன்றி கூறக் கேட்டுக் கொண்டனர். அவர் நன்றிகூற எழுந்தார். அவர் ‘எனக்குத் தமிழ் தெரியாது; எனவே அனை-வருக்கும் நன்றி’ என்று தமிழில் கூறி விட்டு, அமெரிக்கர் பேசும் ஆங்கிலத்தில் பேசினார். அனைவரும் மகிழ்ந்தனர் என்னைத் தவிர.

அவர் சாதி வன்மையற்ற நாடாகிய அமெரிக்காவில், அறி-வியல் துறையில் பணியாற்றினாலும், தமிழ்நாட்டில் தம்முடைய சாதிப்பிரிவிலேயே திருமணஞ் செய்து கொண்டார். சாதி இல்-லாத வெளிநாட்டு வாழுநர், சாதியை மறக்கவில்லை. ஆனால் தன்-னைப் பெற்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டித் தமிழ்த்தேனூட்டி வளர்த்த தாய் மொழியாம் தமிழை மறந்துவிட்டார். சாதியை மறக்காமல் உறுதியாக இருந்ததைப்போல் தாய்மொழி தமிழை-யும் மறக்காமல் இருந்திருக்கலாமே என எண்ணினேன். மொழியைவிட சாதி வலுவாக இருக்கிறதே. இதை எப்போது மறப்பது? ஐயய்யோ ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேனே, தாலி கட்டவும் மறக்கவில்லை, அவர்!

—அதியமான், தாழையூற்று.

○ : *1420* : அன்பு கனிந்த அய்யா அவர்கட்கு,

வணக்கம், பாவேந்தர் நூற்றாண்டுவிழாக் குழுவிலிருந்து தாங்கள் விலகி விடுத்த அறிக்கையினைக் கண்டேன். தாங்கள் குறிப்பிட்டுள்ள காரணங்கள் மிகச் சரியானவையே.

ஒப்புக்காக உயர்மட்டக் குழுவை அமைத்து, அதனைக் கொஞ்சமும் மதிக்காமல், தன்முனைப்புடன்செயல் படுவது நமது முதலமைச்சருக்கு ஆகிவந்த கலையாகும். உயர்மட்டக்குழுவில் உறுப்பாண்மை பெறுவதே (அங்கம் வகிப்பதே) தங்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுபவர்கள் மலிந்துவிட்ட இக்கால கட்டத்தில், இக்குழுவிலிருந்து தாங்கள் விலகியிருப்பது, தன்-மானமுள்ள தமிழறிஞர்கள் இன்னமும் இருக்கிறார்கள் என்பதை நிலைநாட்டியிருக்கிறது. தமிழர் தேசிய இயக்கத்தின் சார்பில் தங்களை நான் பாராட்டுகிறேன். அடுத்தமுறை சென்னை வரும் பொழுது சந்திக்கிறேன். பிறபின் அன்புள்ள,

—பழ. நெடுமாறன், தலைவர், தமிழர் தேசிய இயக்கம், மதுரை.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[திருவனம் தி.பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: (847829)

சுவடி: 25] தி.பி. உ0உக மடங்-கன். (செப்-அக். 90') [ஓலை: 10

தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி-5

இக்கட்டுரைத்தொடரில் நாம் தமிழ்ச் சொல்லியல், மொழியியல் ஆராய்ச்சியறிஞர்களைப் பற்றி எழுதிய கருத்துகளைப் படித்து விட்டு, நம் நெருங்கிய அன்பர்களில் ஒருவர், நாம் அப்பகுதியில் யாரோ ஒருவரை மறைமுகமாகக் குறிப்பிட்டு எழுதுவதாகப் பொருள் பண்ணிக் கொண்டு, நம் மேல் வருத்தமாகவும், சிறிது சினத்தோடும், நாம் அப்படி அக் குறிப்பிட்ட அறிஞரைத் தாக்கியும் தாழ்த்தியும் எழுதுவதாகவும், நடுநிலையோடு அக்கருத்தை நாம் வெளிப்படுத்தவில்லை என்றும் குறைகூறி, நமக்கு நீண்ட மடல் ஒன்றை எழுதியிருந்தார்.

தமிழ்நாட்டில், தமிழறிஞர்கள் தமிழ் வளர்க்கும் முறை பற்றியும், அவர்களின் ஆழமற்ற புலமைப்பாடு குறித்தும், இருக்கின்ற நிலைகளை மிக வருத்தத்துடனே குறிப்பிட்டு, அந்நிலைகளைச் சரி செய்யவேண்டும் என்னும் நன்னோக்கத்துடனேயே சுட்டியிருந்தோமே யல்லாமல், எவரையும் தனிப்பட்ட முறையில்

குறைத்து மதிப்பிடவேண்டும், தாழ்த்திச் சொல்லவேண்டும்— என்னும் நோக்கத்துடன் அக் கருத்துகளை எழுதவில்லை. வெறும் இலக்கிய அறிஞர்களும், தமிழறிஞர்களும் சொல்லாராய்ச்சியிலும், மொழியாராய்ச்சியிலும் ஈடுபட்டு, நம் இயற்செழுமைத் தண்டமிழ் மொழிக்குத் தாழ்ச்சியும் வீழ்ச்சியும் ஏற்படுத்திவிடுதல் கூடாது என்பதே நம் நன்னிலைக் கருத்தாகும்; வேண்டுகோளும் ஆகும். இதை நம் போன்றவர்கள் சுட்டாமல், வேறு எவர்தாம் சுட்டிவிடப் போகிறார்கள்? அவ்வாறு இத்துறைக்குத் தொடர்பற்ற வேறு சிலர் சுட்டினால் எவர்தாம் ஒப்புக் கொள்வார்கள், என்பனவற்றையெல்லாம் அக் கெழுதகை அன்பரும் பிறரும் கேண்மை உணர்வுடன் எண்ணிப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறோம். என்றென்றும் அழியாத் தகைமை வாய்ந்த நம் தென்றமிழ் மொழிக்கு நல்லது செய்தல் ஆற்றோமாயினும், அல்லது செய்யாமை ஆற்றுதல் வேண்டும் என்பது நம் அனைவரதும் பேரின்றியமையாக் கடமையாகும்.

தமக்குத் தகைவான புலனறி புலமைத் தகுதியை மிகைப்படச் சூட்டிக் கொள்வது, ஒருவரது செம்புலமைத் திறத்திற்குத் தகவன்று; தகாததும் தாழ்ச்சியானதுமேயாகும். உற்ற புலமைக்கு உறாத பட்டத் தகுதிகள் நகைப்புக்குரியன மட்டுமன்று, இழிவுக்கும் உரியன; அவற்றை, ஒருகால், அறியார் ஆரவாரிப்புச் செய்யலாம். அறிவார் எள்ளி நகைக்கவே செய்வர். புலமையில் இளிவரல் புன்புலமையையே உணர்த்தும். அக்கால் அஃது உற்ற புலமைக்கும் குற்றம் தரும் அன்றோ?

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். (845)

என்னும் பொய்யாமொழியை மெய்யாய் உணர்தல் வேண்டும். இது நிற்க.

இனி, வரலாற்றுத் தமிழறிஞர்கள் தம் தகவின்மையையும், தகுதியின்மையும் பற்றி எழுதி வந்ததை மீண்டும் விரிவு படுத்துகின்றோம்.

இக்கால் வரலாற்றாசிரியர்களாக உள்ள தமிழறிஞர்கள் சிலர், சிலரின் வரலாறுகளை ஏதோ ஒரு தேவை கருதி எழுதிவிடுகின்றனர். வரலாறு எழுதுபவர்களுக்கு முதலில் வேண்டுவது நடுநிலைமை. அடுத்து, அவர்களுக்கு வேண்டுவன, வரலாற்றியல் அறிவு, உண்மை காணும் உணர்வு, உளையா நின்ற முயற்சி, அவர்கள் எழுதும் வரலாற்றுக்குத் தேவையான நிகழ்வுகளையும் கருத்துகளையும் தேடிப் பெறும் உழைப்பு, அவை தொடர்பாக முன்னரே கூறப் பெற்ற நூல்களையும், நூற்பகுதிகளையும், சான்றுகளையும், பதிவுகளையும் முயன்றறியும் வேட்கை, அவ்வரலாற்று நிகழ்வுத் தொடர்பாளர்களை நேரில் கண்டு, அவர்கள் வழி அறிகின்ற செய்திகளை உள்ளன உள்ளவாறே பதிந்து வெளிப்படுத்தும் மனத்துணிவு, அறிவு மதுகை, வெறுப்பு விருப்பற்ற அறிவியல் பார்வை, மனச் செருக்கு அறிவுச் செருக்-

கின்மை, தாம் எடுத்துக் கொண்ட நூலை எழுதுவதற்கு முன், தாம் தொகுத்து வைத்த செய்திகளையும் குறிப்புகளையும் காலம், இடம், நிகழ்வு நோக்கி, ஒப்பீட்டாய்வு செய்து, சரி பார்த்து நிரல் நிறையுடன் முறைப்படுத்திக் கொள்ளும் பொறையுடைமையும், நிறையுடைமையும், தமக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்று கருதாமல், வரலாற்றுப் பொருத்தம் உடைய செய்திகளையும் செயல்களையும் துணிந்து குறிக்கின்ற இசந்துணிவு முதலிய மனநலன்களும் குணநலன்களும், அறிவு நலன்களும் ஆகிய மாந்த அறிவாண்மைப் பண்புகள்.

ஆனால், இன்றைய வரலாற்றாசிரியர்களாக மிளிர விரும்புகின்றவர்களிடம் இத்தகைய இன்றியமையாத் தேவைத் திறன்களில் நான்கில் ஒரு பங்கேனும் உள்ளனவா என்றால், இல்லையென்றுதான் கூறவேண்டியிருக்கும். இந்நிலையில் அவர்கள் தங்கள் தனிநிலை வரலாற்றுக்குப் பெருமை சேர்த்துக் கொள்ளும் வகையில்தான் வரலாற்றாசிரியர்களாகத் தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றார்களே தவிர, மற்றுத் தாங்கள் எடுத்துக் கொண்ட நோக்கத்திற்கான காலத் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில்லை.

அண்மையில், மதுரைப் புலவர் இளங்குமரனார் அவர்கள் எழுதிய பாவாணர் பற்றிய ஒரு வரலாற்று நூலை நாம் பார்க்கவும், படிக்கவும் நேர்ந்தது. நூல் பலவகைச் சுருக்கச் செய்திகளோடு ஓரளவு நன்கு எழுதப் பெற்றிருந்ததாயினும், அந்நூலின் கண் குறிக்கப் பெற்றுள்ள செய்திகள் பலவற்றுக்கு எவ்வகைச் சான்று அடிப்படையும் இருப்பதாகக் கருத முடியவில்லை. மேலும் அந்நூலிலுள்ள செய்திகள் வரலாற்றுத் தகுதியுடையனவாக இருக்கின்றன என்பதைவிட, திறனாய்வுத் தகுதியுடையனவாகவே உள்ளன என்றுதான் குறிப்பிடற் கியலும்.

அந்நூலில், பாவாணர் பற்றிய தகவுக் கூற்றாக, மூவரின் கருத்துரைகளை வெளியிட்டிருக்கின்றார் நூலாசிரியர். அம் மூன்று கூற்றுகளில் ஒன்று அவர் 'செந்தமிழ்ச்செல்வி'யில் எழுதியது; இன்னொன்று நாம் தென்மொழியில் எழுதியது; மற்றொன்று, திரு. தமிழ்க்குடிமகன் எழுதியதாகக் குறிக்கப் பெற்றுள்ளது. இது தவறு. தமிழ்க்குடிமகன் எழுதியதாக அவர் குறிப்பிட்டுள்ள உரைப்பகுதியும் நாம் தென்மொழியில் எழுதியதுதான். அதை அவர் அவருடைய இதழில் எடுத்து வெளியிட்டிருந்தார். அவ்வெளியீட்டிலும் அவர் அதைத் தென்மொழியிலிருந்து எடுத்து வெளியிடுவதாகவும் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறிருந்துங்கூட அந்நூலில் அப்பகுதி அவர் எழுதியதாகத்தான் குறிப்பிடப் பெற்றிருந்தது. இதை எதற்காக இங்கெடுத்துக் கூறுகிறோம் எனில், வரலாறு எத்துணை மேம்போக்காக எழுதப் பெறுகிறது என்பதைக் குறிக்கத்தான்! கண்ணுக்குக் கண்ணாகக் கல்போலும் பருப் பொருளாகத் தென்படும் உண்மைகளே இவ்வாறு திரித்தும், ஆய்வு நோக்கின்றியும் எழுதப் பெறுமானால், தெளிவின்றிக்

கிடைக்கின்ற பல கூறுகளையும் ஒப்ப வைத்து ஆய்ந்து உண்மை தெளிந்து எழுதவேண்டிய பல வரலாற்றுச் செய்திகள் எத்துணைப் பிழைபாடுகள் கொண்டனவாக எழுதப் பெறும் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

மேலும், வரலாறு எழுதுகிறவர் தமக்கு வேண்டாதவர்களை விலக்கியும், வேண்டியவர்களைத் துலக்கியும், தம் சார்பானவற்றைத் தூக்கியும், பிறர் சார்பானவற்றைத் தாக்கியும், தம் சாதி, உறவுகளைப் போற்றியும், பிறசாதி, உறவுகளைத் தூற்றியும், தமக்கு உகந்தவர்களை விரித்தும், உகவதாவர்களைத் திரித்தும், தம் ஊர் காரர்களை நிறைத்தும் பிற ஊரார்களைக் குறைத்தும்—வரலாறுகளை எழுதுவதே வழக்கமாக உள்ளது. பாரதியார் வரலாற்றைப் பார்ப்பனரும்,பார்ப்பன அடிவருடிகளும் எழுதும்போது அவரை ஒரு 'மகாகவி' என்றும், உலக முழுமைக்குமாக அவர் கருத்துகளைப் பொருத்தியும் எழுதுகின்றனர். ஆனால் பாவேந்தர் வரலாற்றை அவர்களே எழுதும் பொழுது, பாரதியினும் பன்மடங்கு அவரை அடக்கியும், மடக்கியும், தாழ்த்தியும், வீழ்த்தியுமே எழுதுவதை நாம் பற்பல நூல்களிலும் பார்த்துப் படித்து மனம் கசிந்திருக்கின்றோம். நம் அரைகுறைத் தமிழறிஞர்கள் வரலாறு இவ்வகையில் நலிந்தும் மெலிந்தும் இருப்பதை நாம் எவ்வாறு குறிப்பிடாமல் இருத்தல் இயலும்?

நந்தமிழறிஞர்கள் எத்தனையோ வகைகளில் இலக்கிய வரலாறுகளை எழுதி வெளியிட்டிருக்கின்றனர்; வெளியிட்டும் வருகின்றனர். அவற்றுள் முற்காலத் தமிழறிஞர்களின் வரலாறு, பிற்காலத் தமிழறிஞர்களின் வரலாறு, தற்காலத் தமிழறிஞர்களின் வரலாறு என்னும் பாகுபாடுகளும் செய்யப் பெற்றுள்ளன. ஆனால் முற்கால, பிற்கால, தற்காலத் தமிழறிஞர்களில் எத்தனைப் பேர்களின் வரலாறுகள் விடுபட்டுள்ளன, இருட்டடிக்கப் பெற்றுள்ளன, மறைக்கப் பெற்றுள்ளன. குறைக்கப் பெற்றுள்ளன; திரிக்கப் பெற்றுள்ளன, சரிக்கப் பெற்றுள்ளன என்பவற்றை அவற்றைப் படிக்கும் பொழுது அறிந்து எவ்வளவு வருந்த வேண்டியுள்ளது மனம் குமுற வேண்டியுள்ளது, என்பதை, அவற்றை நடுநிலையுணர்வொடு படித்தறிந்தவர்களே உணர்வர். அத்தகையவர் முற்காலப் பிற்கால வரலாறுகளைக் குறையாக உணர்ந்திலரேனும், தற்கால வரலாறுகளை உணர்ந்தவர் அவற்றைக் குறைத்து மதிப்பிடாமல் இருத்தல் முடியாது.

தற்காலப் பாவலர்களைக் குறிப்பிடுகையில், அவ்வரலாறுகளை எழுதுகிறவர்கள், ஏதோ தத்துப்பித்து என்று பாடல்களை எழுதியவர்களையெல்லாம், ஏதோ ஒரு வரிசையில் நிரல்படுத்தி எழுதியிருக்கும் பொழுது, சிறந்த, தகுதியுள்ள பாவலர்கள் பலரை, அவர்களுக்குத் தெரியாதவர்கள் என்றோ, வேண்டாதவர்கள் என்றோ, தம் கொள்கையை—கட்சியைச் சாராதவர்கள் என்றோ, அவர்களுக்குத் தெரிந்த புதுப்பா (புதுக்கவிதை) எழுதாதவர்கள் என்றோ, அவர்கள் புறக்கணித்து ஒதுக்கிவிட்ட மரப்பாடல்கள் எழுதியவர்கள் என்றோ, கருதி, அவர்களையெல்லாம் ஓரிரு தகுதி-

களின் அடிப்படையில்கூட, எழுதாமல் இருப்பதை என்னென்று கூறுவது? பெரும்பாலும் இதுவரை வெளிவந்த அனைத்து இலக்கிய வரலாறுகளிலுமே இந்தப் பெருங்குறை காணப் பெறுகிறது. இதற்கு யார் பொறுப்பு? அவ் வரலாற்றாசிரியர்களின், வரலாற்றுத் தகுதியற்ற குறுகிய மனவளர்ச்சிதான் பொறுப்பு! என்னே, தமிழறிஞர்களின் வரலாற்றியல் தகைமை!

இனி, வரலாற்றாசிரியர்களின் மனவியல் வறட்சி பற்றி இன்னொரு முகாமையான செய்தியையும் இவ்விடத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அவ்வாறு குறிப்பிடாமல் போனால், வரலாற்றாசிரியர் தொடர்பான சில உண்மைகளை மக்கள் இனங்கண்டு கொள்ளாமலேயே போய்விடக் கூடும்.

பர். மு. வ ர த ரா ச னா ர், பர். சி. பாலசுப்பிரமணியனார் போன்ற ஓரளவு புலமைத் திறனும், தகுதிப்பாடும் கொண்ட பேராசிரியர்களின் இலக்கிய வரலாற்று நூல்களில் கூட, இவ்விருபதாம் நூற்றாண்டில் தூய தமிழ்ச் செழுமை மிக்க இலக்கியங்களை ஆக்கிக் கொடுத்த இக்கட்டுரையாசிரியர்தம் பெயரும், அவர் தம் அரிய இலக்கியப் புலமையும், ஏறத்தாழ நாற்பதாண்டுக்காலத் தனித் தமிழ்த் தொண்டும், அதே போலும் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் தம் அரிய தனித்தமிழ்த் தொண்டும், மொழியாய்வுத் திறப்புலமையும், புறக்கணிக்கப் பெற்றுள்ளன எனின், மு. வ. போலும் சி. பா. போலும் அருந்தமிழ் ஆற்றலற்ற பிறர் சிலர் எழுதிய இலக்கிய வரலாற்று நூல்களைப் பற்றி ஏதும் சொல்லத் தேவையில்லையன்றோ?

அத்துணை ஏன், மு. வரதராசனார் அவர்களின் இலக்கிய வரலாறு வெளிவந்த சிலவாண்டுகளுக்குப் பின்னர், அது தொடர்பாகப் பாவாணரின் தலைமாணாக்கர் ஆகிய இக்கட்டுரையாசிரியரும், பாவாணரும் பேசிக் கொண்டிருந்த பொழுது, மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள், பேரா. மு. வரதராசனார் எழுதிய இலக்கிய வரலாற்றில் தம்மைப் பற்றியும், இக்கட்டுரையாசிரியரின் அரிய இலக்கியத்திறன் பற்றியும் தமிழ்த் தொண்டு பற்றியும் அவர் ஏதும் குறிப்பிடவில்லையே என்று பெரிதும் குறைப்பட்டுப் பேசினார். ஆனால், பாவாணரே, பின்னர் தமிழ் வரலாறு, தமிழ் நாட்டு வரலாறு, இலக்கிய வரலாறு என்னும் வரலாற்று நூல்களை எழுதினார். அக்கால், அவரும் கூட, தம் நடுநிலையற்ற தன்மையாலும், மனம் வராத இவறல் உணர்வாலும், இக் கட்டுரையாசிரியர் பற்றித் தமிழ் வரலாறு, தமிழ் நாட்டு வரலாறு என்னும் இரு நூல்களில் மட்டும், இக் கட்டுரையாசிரியரையும், அவரையும் இணைத்து உணர்ந்த அன்பர் சிலர், அவர் மேல் குறைப்பட்டுக் கொள்ளக் கூடாது என்பதற்காக, ஏதோ போனான் போக்காக, ஓரிரு வரிக் குறிப்புகளையே குறிப்பிட்டிருந்ததைப் பற்றியும், இக்கட்டுரையாசிரியர் பற்றிய முழு இலக்கியத் தனித் தகுதி பற்றிக் கட்டாயம் குறிப்பிட்டிருக்க வேண்டிய அவரது இலக்கிய வரலாறு நூலில் அத்தகைய ஓரிரு வரிக் குறிப்புகளைக் கூட வேண்டுமென்றே, கரவாக, எழுதாமல்

விட்டுவிட்டது பற்றியும், யாரிடம் போய்க் கூறிக் குறைப்பட்டுக் கொள்ள முடியும்? தம் தலைமாணுக்கர் ஒருவரின் தகுதிமிக்க இலக்கியத் திறனையும் தொண்டையும் மதிப்பிட்டுரைத்திருக்க வேண்டிய ஆசிரியரே, தம் மனக்கசண்டால் இத்தகைய நடுநிலை தவறிய வரலாற்றாசிரியத் தகவின்மைக்கு, ஒரு தலை சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்திருக்கிறார் என்பதைத் தவிர வேறென்ன சொல்ல முடியும் என்பதை அறிஞர்களும் வரலாற்று மாணவர்களும் ஆழ்ந்து எண்ணிப் பார்ப்பார்களாக.

இவ்வாறான, தகாநிலைப்பாடுகளை எல்லாம் இங்குப் பெயர், இடம் சுட்டிக் குறிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது எனில், நம் தமிழறிஞர்கள் வரலாற்றாசிரியர்களாக மாறுமிடத்து, எவ்வளவில் அத்தகவாண்மைக்குப் பொருத்த மிலராக நடந்து கொள்கிறார்கள என்பதை, இத்தொடர் கட்டுரையைப் படிப்பார் உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தானே அன்றி, அவ்வாசிரியர்களைக் குறைகூற வேண்டும் என்பது நம் நோக்கமன்று; கொள்கையுமன்று.

இனி, தமிழறிஞர்களில் சிலர் அகராதித் தொகுப்பாசிரியர்களாகத் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் தகவின்மையையும் மிகவும் வருத்தத்துடன் நாம் கவனித்து வந்திருக்கின்றோம். அகராதி அல்லது அகரமுதலித் தொகுப்பென்பது ஓர் அரிய அறிவுக்கலை. அதில் ஈடுபடுகின்ற மனப்பக்குவமும், மொழியியல், சொல்லியல் அறிவு நாட்டமும், பல வகையான பொருள் காணுகின்ற வேட்கையும், சொற்களை ஒப்பிட்டுப் பார்க்கும் நல்லுணர்வுத் திறனும், அவற்றின் பொருள்களில் ஆழ்ந்து நுட்பங் காணும் நோக்கும், இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக வாய்த்த கழிபெரும் பொறுமையும், அத்தகைய அகராதித் தொகுப்பாசிரியர்க்கு இயற்கையாகவே இருக்கவேண்டிய தகுதிப் பாடுகளாகும். ஆனால், மற்ற துறையறிஞர்களைப் போலவே, தேவையான தகுதிப்பாடுகளில் ஒன்றிரண்டுதாமும் சரிவர வாய்க்கப் பெறாத மேலோட்ட உணர்வாளர்களெல்லாம், சொற்பொறுக்கும் பொழுதுபோக்கும், விளையாட்டு வேட்கையும் உடையவராய், அகராதித் தொகுப்பாசிரியர் என்னும் அளப்பருந் தகுதியைத் தம்மேல் திணித்துக் கொண்டு, தாம் கண்ட, கேட்ட, காணுகின்ற நூலறிவோடு பொருந்த வைத்துப் புளுகிக் கொண்டு திரிகின்றவர்களைப் பார்த்துப் பார்த்து மனம் வெதும்பிப் போயிருக்கின்றோம்.

நம்மருஞ் செந்தமிழ் மொழிக்கண் ஒரு சொல்லுக்குப் பலவாறான நுண்பொருள் விளக்கங்கள் உண்டு என்பதை நற்றமிழ் அறிஞர் பலரும் நன்கு உணர்ந்திருப்பர். அப்பொருள் விளக்கங்களுக்கெல்லாம் தக்க கரணியங்கள் உண்டு என்பதையும் அவர்களுள் சிலர் அறிந்திருப்பர். எனவே ஒரு சொல் பல பொருள்; பலபொருள் ஒருசொல்—என்னும் அமைப்புகள் நந்தமிழ் மொழிக்கண் வேறெந்த மொழியைவிடவும் மிகுதியும் உண்டு.

(தொடரும்)

அப்பாத்துரையார் குடும்ப நலக் கொடை!

பட்டியல்-4

ஆசிரியரின் அன்பு வேண்டுகோளுக்கு இசைந்து பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்களின் குடும்பத்துக்கு உதவிய தூய தமிழ் நன்னெஞ்சங்கள்;

(2-8-90 முதல் 7-9-90 முடிய)

28-7-90-அன்று வெள்ளோடு, ஆசிரியர் அவைக் கூட்டத்தில், கொம்மக்கோவில், பாவலர், திரு. கொ. செ. சின்னப்பனார் அவர்கள் தண்டல் செய்து விடுத்த தொகை விளக்கம்:

(வரிசை எண் 178 முடிய)

		உருபா
160	வெ. தா. இராசகோபாலன்,	10
161	சு. செயப்பிரகாசம்	10
162	சா. மனோகரன்	10
163	வி. பி. சரசுவதி	5
164	சகுந்தலா	5
165	கு. ச. சுப்பிரமணி	5
166	க. மணி	10
167	வெ. மா. பெரியசாமி	10
168	சு. சுப்பிரமணி	5
169	க. பாலசுப்பிரமணி	10
170	ச. பிரேமா	5
171	இரா. ஆண்டாள்	5
172	சி. லோகநாதன்	10
173	அ. நடராசன்	10
174	செ. வி. சுந்தரம்	10
175	இரா. கெட்டிமுத்து	10
176	அ. செ. கந்தசாமி	10
177	ப. அர்த்த நாரீசுவரன்	10
178	கெ. செயா	10
179	பேரா. சாலை. இளந்திரையன், சென்னை-86 (6-ஆம் முறை)	100
180	என். தனராசு அரிமா வளங்கோ, பிரான்சு (வரைவோலை வழி)	1044
181	பிரான்சில் உள்ள தனராசு அரிமா வளங்கோ சூலை 90முதல் தொடர்ந்து மாதம் உரு.150/- மேனி புதுவையில் உள்ள(Holy Redeemer's) பொருளியல் குழுமம் வழியாக விடுப்பதற்கு ஏற்பாடு செய்த வகையில் கடந்த சூலை/ஆகத்து மாதங்களுக்கான-தொகை, வரவு.	300

182	கா: அப்பாத்துரை, நடுப்பட்டி	25
183	பேரா: சாலை இளந்திரையன், சென்னை-86- (7-ஆம் முறை: செப் 90)	100
184	இலெனின், கள்ளக்குறிச்சி—	24
	மொத்தம்	1753.00
	முந்தைய மொத்தம்	11924.50
	தொகு மொத்தம்	13677.50

தமிழறிஞர் குடும்பத்தைக் காக்கும் தண்டமிழ்ப் பணிக்குத் தோன்றாத் துணையாக நிற்கும் மெய்ம்மைத் தமிழ் நெஞ்சங்களுக்கு எம் நெஞ்சு நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும் உரியவாகுக!

குறிப்பாக, பிரான்சிலுள்ள நம் உ.த.மு.க. அமைப்பாளரும், தென்மொழிப் புரப்பாளரும், நீங்காத தென்மொழித் தொண்டரும் உணர்வாளரும், நிலையான தமிழினப் பற்றாளரும், விடுதலை வேட்பாளரும் ஆகிய தனராசு அரிமா வளங்கோ அவர்கள், தாம் தனியாக உரு. 1044/- அனுப்பியதுடன் நில்லாது, ஒரு கணிசமான தொகையான உரு. 150-ஐ மாதா மாதம் அம்மையாருக்குக் கிடைக்கும்படி செய்திருப்பதும் பெரிதும் பாராட்டத்தக்கதும், நன்றியொடு நினைவு கூரத் தக்கதும் ஆகும். அவருக்கும் நம் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்து, நம் தென்மொழிப் பாவலர் கொ.செ. சின்னப்பனார் அவர்கள், தாம் ஆசிரியப் பொறுப்பினின்று ஓய்வு பெற்ற பின்னும், தம் கடமையுணர்வு தவறாது, உடன் பணியாற்றிய ஆசிரியர்களிடம் தொகை தண்டி விடுத்தமைக்கும், தன்மானப் பேராசிரியர் சாலை. இளந்திரையனார் அவர்கள், தாம் தொடக்கத்தில் கூறிய உறுதி மொழிப்படி, தொடர்ந்து மாதா மாதம் உரு. 100/- அனுப்பி வைக்கின்றமைக்கும், எம் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பர்கள் பிறரும், மேலுள்ள கடமைத் தமிழ் நெஞ்சங்களைப் பின்பற்றித் தங்களால் இயன்ற உதவிகளைப் பன்மொழிப் புலவர் குடும்பத்திற்கு அருளியுதவுமாறு வேண்டிக் கொள்கிறோம். ○

தமிழகத்தின் இருண்டகாலம்!

தமிழக வரலாற்றில் கி. பி. 250 முதல் கி. பி. 550 வரை உள்ள 200 ஆண்டுக்கால வரலாறு குறித்த செய்திகள் ஒன்றும் கிடைக்கவில்லை என்று வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். எனவே தமிழக வரலாற்றில் இம் முந்நூறு ஆண்டுக்காலமும் இருண்டகாலம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொல்காப்பியம்!

உரைப் பெரும்புலவர்: சந்திர பாலசுந்தரனார்

மன்பதையுள் குரல் ஒலியை மொழியாக்கிப் பேசுந்திறன் மக்களினத்திற்கே வாய்த்ததொரு பெரும் பேறுகும். மொழி, மக்களால் படைக்கப் பெற்று, அவர்களால் ஆக்கமுற்று, வளர்ந்து, அவர்கட்கு அறிவாகவும் அறிவுத் துணையாகவும் அமைந்து விளங்கும் ஒப்புயர்வற்றதோர் அருவப் பொருளாகும். அதற்கு உருவும் வடிவும் கற்பித்து எதிர்காலத்திற்குப் பயன்படச் செய்பவரும் மக்களேயாவர்.

அம் மக்கள் தம் காம, வெகுளி, மயக்கங்களான் காலந்தோறும் மொழிநிலை திரிபுற்றுச் சிதையா வண்ணம் தொல்லோர் வகுத்த இலக்கண மரபுகளை அறிவியல் அடிப்படையில் சுருக்கமாக உணர்த்துவது தொல்காப்பியச் சொல்லதிகாரக் கோட்பாடுகளாகும்.

மொழியின் தோற்றம்:

காட்சிக்கும் கருத்திற்கும் உரிய பொருளுணர்வு ஐம்புல வாயிலாக உயிர்கட்கு எய்துதலான் ஐம்பொறிகள் உள்ள உயிர்கட்கெல்லாம் பொருளுணர்ச்சி இயற்கையேயாம். அவ்வுணர்வுகளை உடலுறுப்பு அசைவுகளானும், குறிப்பொலிகளானுமன்றி ஓசை, ஒலிகளை மொழியாக்கி உணர்த்தும் அறிவையும் அதற்கேற்ற வாயமைப்பினையும் பெற்றுள்ளது மக்களுயிர் மட்டுமேயாகும். அவ்வறிவு ஐம்பொறிகளுக்கும் அப்பால் அவற்றொடு தொடர்புடைய தொரு புலனுக்குரியதாகும். மெய்ப்பொருள் நூலார் அதனை உட்கருவி (அந்தகக் கரணம்) என்பர். அதனை ஆறுவது அறிவு எனத் தொல்காப்பியம் கூறும். அதற்குப் பெயர்க் குறியீடு மனம் அல்லது உள்ளம் என்பதாகும்.

மனவுணர்வை வேறு சில உயிரினங்களும், சிறுபான்மை உடையன எனினும், அவற்றிற்கு அவ்வறிவு தம் உணர்வுகளை வாயாற்பேசி வெளிப்படுத்தும் ஆற்றலொடு கூடி அமையாமையான்,

"மக்கள் தாமே ஆறறி உயிரே" என்றும்,

"பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" என்றும்,

தொல்காப்பியம் விளம்புகிறது.

அதனுன் உலகப் பொருள்களுள் மொழியொடு தொடர்புடையதாய் அம்மொழியானே நாளும் நாளும் உயர்ந்து வருவதாகிய மக்களினத்தை உயர்திணை என்றும், அங்ஙனம் உயர்தற்கு வாயாதவற்றை அஃறிணை (அல் + திணை) என்றும் இரு கூறுகப் பிரித்து, அவ்வடிப் படையில் சொல்லிலக்கணத்தை வகுத்தமைத்துள்ளனர் தமிழ் நூலார்.

மக்கள் இருதிணைப் பொருளையும் உணர்ந்து அப்பொருளைப் பிறர்க்குணர்த்தும் ஒலிக்குறியீடுகளாகிய சொல்லை அப்பொருளை இடமாகக் கொண்டு படைத்துப் பின்னர் அச் சொற்கள் கருவியாகப் பொருளை உணர்த்துகின்றனர்.

இதனை,

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே. (சொ-1)

எனச் சுட்டுகின்றது தொல்காப்பியம்.

ஒருவன் ஒரு பொருளைப்பற்றிக் குறியீடு செய்யுங்கால், அக்குறியீட்டைச் செய்வதற்கு அவனிடத்து அப் பொருள் தோற்றுவிக்கும் உணர்வுகளே காரணமாம்; அவ்வுணர்வு ஐம்புலன்களின் வாயிலாகவும், ஆறுவதறிவாகிய மனத்தின் வாயிலாகவும் நிகழும். மனக் குறிப்பிற்குப் பெரிதும் துணைபுரிவன செவியும் விழியுமாகும். ஆதலின் அடிப்படைச் சொற்கள் (குறை உரிச் சொற்கள்) இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி (உரி-1) ஆக்கமுறும் என்கிறது, தொல்காப்பியம்.

சொல்லமைப்பும் பாகுபாடுகளும்:

அங்ஙனம் ஆக்கமுற்று ஒன்றும் பலவுமாக அமைந்து உணர்வுகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் சொற்களை ஆராயின், அவை இருதிணைப் பொருளையும், அவற்றின் தன்மை இயல்புகளையும், செயல்களையும் தெரிவிப்பனவாக அமைந்திருக்கும்.

அவற்றுள் பொருளைத் தெரிவிக்கும் சொற்கள் பெயர்ச் சொல் என்றும், செயலைத் தெரிவிக்கும் சொற்கள் வினைச்சொல் என்றும், தமிழ் நூலார் குறியீடு செய்துள்ளனர். தன்மை இயல்புகளை உணர்த்தும் சொற்கள் பெயராயும் வினையாயும் இரண்டற்கும் பொதுவாயும் நிற்கும்; அதனால் சொற்களை இரண்டு பெரும் பிரிவுகளாக வகுத்தனர், நூலோர்; இதனை,

''சொல்லெனப் படுவ பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே'' (சொல்-4)

எனத் தொல்காப்பியம் புலப்படுத்துகிறது.

ஒரு பொருளைக் கருதி உணர்வதற்கு அப்பொருளையே அடிப்படையாகக் கொண்டு சொற்கள் தோற்றுவிக்கப் பெறுதலின், பொருளைச் சுட்டாத வெறுமைச் சொல் என்பது ஒன்றுமில்லை என்பது நூலோர் முடிபு. இதனை

''எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே''

என்கிறது தொல்காப்பியம்.

பொருள்களை உயர்திணை, அஃறிணை என வகுத்துக் கொண்டமையான், அவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு தோன்றும் சொற்களும் இருவகையாக அமைவனவாயின.

மக்கட் சுட்டாகிய உயர்திணைப் பொருள்களுள் ஆண், பெண் என்னும் இரு பிரிவுகள் உள்ளமையான், தனி ஓர் ஆண் மகனை-யும், பெண் மகளையும் குறிப்பதற்குரிய குறியீடுகளும், அவர் தம் குழுவினைக் குறிப்பதற்குரிய குறியீடும் இன்றியமையாதன-வாகலின் அக்குறியீடு காரணமாக உயர்திணை மூன்று பால்களாக விரிகின்றது. இதனைத் தொல்காப்பியம்,

> ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
> பல்லோ ரறியும் சொலலொடு சிவணி
> அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே (சொல்-2)

எனப் பகருகின்றது.

அஃறிணையுள் ஒருசில விலங்குகள் பறவைகள் தவிர, ஓரறி-வுயிர் முதல் ஐயறிவுயிர் ஈறாக உள்ள பலவற்றுள் ஆண், பெண் பகுப்பு உணர்தற்கரியதாக உள்ளமையானும், நீர், நிலம் முதலாய உயிரில்லாத பருப் பொருள்களுள்ளும், அன்பு, அருள், நன்மை, தீமை முதலாய அருவப் பொருளுள்ளும், ஆண்மை, பெண்மை கோடற்கின்மையானும், அஃறிணையை ஒருமை, பன்மை தேர்ந்துணர்தற்குரிய இருபால்களாக அமைத்தனர் தமிழ் நூலார். இதனை,

> "ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று
> ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே"

எனப் புலப்படுத்துகின்றது தொல்காப்பியம்.

அங்ஙனம் அமைந்த இருதிணை ஐம்பால்களே ஒருமையும் பன்மையுமாகிய எண்களை உணர்த்தி நிற்றலின், பாலின் வேறாக எண் என்பதொரு பகுப்பைத் தமிழ் நூலார் வகுத்துக் கொண்-டாரிலர்.

புல்பூண்டு, மரம் செடி கொடிகளாகிய ஓரறிவுயிருள்ளும், இரண்டு முதல் ஐந்தறிவு வரையுள்ள புழு, பூச்சி முதல் விலங்கு ஈறாகவுள்ள உயிர்களுள்ளும் பல்வேறு வகை இனங்கள் (சாதிகள்) உள்ளமையான் அஃறிணைப் பெயர்கள் பலவாக அமைந்துள்ளன. மக்கட்சாதி ஒன்றே யாகலின் மக்களுள் ஒவ்வொருவரையும் சுட்டி உணரப் பல்வேறு இடுகுறிப் பெயர்கள் அமைவன வாயின.

மக்களுக்கு இடப்பெறும் பெயர்கள் காரணம் பற்றியும் பற்றாதும் அமையும். அவையாவும் அஃறிணைப் பொருட் பெய-ரின் அடிப்படையிலேயே தோன்றி நிற்கும். ஒரு பெயரே ஆண் மகனுக்கும் பெண் மகளுக்கும் அமைந்துவிடும். அதனால் அவ் விடு பெயர்களைக் கொண்டு திணையும் பாலும் உணர்தல் அரிதாகும். அவ்வாறே அஃறிணையுள் ஒரு சாதியாக உள்ள பொருள்களைப் பிரித்துணர்த்த வேண்டின் இடுபெயர்களாலேயே உணர்த்தல் இயலும். ஆதலான் இருதிணையுள்ளும் திரிபின்றிப் பாலுணர்த்-தும் பெயர்ச் சொற்கள் மிகச் சிறுபான்மை (சுட்டுப் பெயர், வினாப் பெயர் முதலியன)யாக அமைவனவாயின.

ஆதலின், பெயர்ச் சொற்களின் அடிப்படையில் திணை பால்களை வரையறை செய்தல் கடைபோகாமை (முடிவு ஏற்படாமை) உணர்ந்து, வினைச் சொற்கள் வாயிலாக—அவற்றுள்ளும் படர்க்கை வினைச் சொற்களின் வாயிலாக ஐம்பாற் பொருள்களை வேறுபடுத்துணரும் முறையிற் சொல்லாக்க மரபிற்கு இலக்கணம் வகுத்துச் சென்றனர் தமிழ்நூலார். இதனைத் தொல்காப்பியம்,

இருதிணை மருங்கின் ஐம்பா லறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினே ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே (சொல்-10)

என விளம்புகின்றது. எனினும் பெயருள் பால்வரைத் துணர்த்துவனவும் உளவென்பதை,

வினையிற் றோன்றுப் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே. (சொல்-11)

என்னும் சூத்திரத்தான் அறிவுறுத்துகின்றார் தொல்காப்பியர்.

இனி, உலகத்துப் பொருள்கள் பல்வேறு இனமாக (சாதிகளாக)த் திகழ்கின்றமையான் பெயர்கள் வேறு வேறாக அமைவனவாயின. ஆயினும் அவை பற்றிய வினைகள் பொதுவாக அமைதலின் வினையை உணர்த்தும் முதனிலைச் சொற்கள் ஐம்பாலுக்கும் பொதுவாக உள்ளன. எனவே ஐம்பாற் பொருள்களுள் ஒன்று, ஒரு வினையை மேற்கொண்டகாலை அப்பொருள் இன்னபால் என்பதனை உணர்த்த, அவ்வினை நிகழ்வு பற்றிய குறிப்போடு ஒரு துணைக் குறியீட்டைச் சேர்த்தாலன்றி உணர்த்த இயலாது. அங்ஙனம் சேர்க்கப்படும் ஒட்டுகளைத் தமிழ் நூலார் இடைச்சொல் எனக் குறியீடு செய்து வகுத்து அமைத்துக் கொண்டுள்ளனர்.

அங்ஙனம் வினைச்சொல்லின் இறுதி நின்று திணைபால்களை வரையறுத்துணர்த்தும் இடைச் சொற்களே பெரும்பான்மையும் பொருட்பெயர்களின் இறுதியிற் சேர்ந்து, திணைபாலுணர்த்தும் பெயர்ச் சொற்களாகின்றன. அங்ஙனம் தனி ஒரு தொழிற் பெயராகவும் பொருட் பெயராகவும் இருந்த சொல்லை இவ்விடைச் சொற்கள் பாலுணர்த்தும் சொற்களாக வேறுபடுத்து வரையறை செய்தலின்,

இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே. (சொல்-250)
இடைச்சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே
(சொல்-456)

எனக் கூறுகின்றது, தொல்காப்பியம்;

தொழிற் சொற்களைக் காலக்குறிப்பொடு பாலுணர்த்தவைக்கும் ஆற்றலுடைமையான், அவ் விடைச்சொற்கள்

பெயரைச் சார்ந்து அமையுங்கால், அப் பெயர்ச் சொற்களுக்கு அவை வினைத் தன்மையையும் ஊட்டி விடுகின்றன. அவ்வினைத் தன்மை சூழலை நோக்கி நிற்கும். அதனுன் இறுதியில் இடைச் சொற்களைப் பெற்று நிற்கும் பெயர்ச் சொற்களே குறிப்பு வினைச் சொற்களாக ஆக்கம் பெறுகின்றன.

தொழிற் சொற்களின் இறுதிக்கண் வரும் இடைச் சொற்களை இருபத்தொன்பதாக வகுத்துக் கூறுகின்றது தொல்காப்பியம். அவற்றுள் னஃகான் ஒற்று முதலாய பதினேர் இடைச் சொற்கள் சிறப்புடையனவாகும்.

வினை என்பது பொருளான் மேற்கொள்ளப் படுவதாகலின் ஒரு பொருள் ஒரு வினையை மேற்கொள்ள முற்படும் நிலையில் அப் பொருட்கு அவ்வினை எதிர்கால வினையாகும். மேற்கொண்டு ஆற்றுகின்ற நிலையில் அது நிகழ்கால வினையாகும். அங்ஙனம் ஆற்றுதலை விட்டு நீக்கிய நிலையில் அ'து இறந்த கால வினையாகும். அதனல் தமிழ் நூலார் மூன்று காலங்களையே வடித்துக் கொண்டனர். வடநூலார் வகுத்த ஏனைக் காலங்கள் இவற்றுள் அடங்கி நிற்றலை அறியலாம். இம் மூன்று காலத்தையும் சொல்லகத்துப் புலப்படுத்து நிற்பதும் இடைச் சொல்லேயாம். காலத்தைப் புலப்படுத்தும் இடைச் சொற்கள் வெளிப்படையாகப் பிரித்துணருமாறும் நிற்கும்; பிரித்துணர இயலாமல் அச் சொல்லொடு ஒன்றுபட்டு அதனுட் கரந்தும் நிற்கும். ஆதலின் கால இடைச் சொற்கள் இவை எனக் கிளந்து கூறுமல், ''வினைச் செயல் மருங்கிற் காலொடு வருநவும்'' (சொல்—251) எனவும், வினைச் சொற்கள் ஒரு மொழிப் புணரச்சியாகலின், ''புணரியல் நிலையிடை உணரத் தோன்ரு'' (எழுத்து-482) எனவும் ஆசிரியர் இசைத்துச் சென்ருர். நன்னூல் முதலாய பின்னூல்கள் கடை போகா வகையிற் பிரித்துக் கூறியுள்ளன. காலக்கிளவு என்பது வினைச் சொற்களிடத்து மெய்ப்பாடு போல அமைந்து நிற்கும் இயல்பினதாகும். (தொடரும்)

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
கொள்கைகள் அடங்கிய கிழமை இதழ்.

தனியிதழ்	விலை	உரு.	1-00
ஆண்டுக் கட்டணம்	,,	,,	50-00
அரையாண்டுக் கட்டணம்	,,	,,	25-00

தொடர்புக்கு: தமிழ்நிலம், 5, அருணுசலத் தெரு, சென்னை5.

தமிழ் மொழிக்குள்ள தாக்கங்கள்!

---கீதா உதயகுமார்

முதலமைச்சர்க்கு ஒரு முறையீடு!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு,

வணக்கம். 17—3—90 அன்றைய 'இந்து' ஆங்கிலச் செய்தியேட்டில் வெளியாகியுள்ள செய்தி ஒன்றினால் மனம் பதைத்து இம்மடலைத் தங்களுக்கு அனுப்புகிறேன். ஆந்திர மாநிலம் உருவாக அடிப்படையாக இருந்த 'பொட்டி சிரிராமுலு' என்ற தெலுங்கரின் பிறந்தநாள தொடர்பாகச் சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில், சாத்திரி என்ற தெலுங்கர் ''தெலுங்கு மொழி தமிழகத்தின் இரண்டாவது ஆட்சி மொழியாக வேண்டும் என்ற தெலுங்கரின் நீண்டநாள் வேண்டுகோளைத் தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டதாகச் செய்தி கூறுகிறது.

கழகக் காலத்திலிருந்து தமிழர் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட உட்பூசல்கள், கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் வேற்றுமொழியாளர் தமிழக மண்ணில் நுழைந்து, ஆட்சியைக் கைப்பற்ற வழிவகை செய்து அளித்தன. கி. பி. 16-ஆம் நூற்றாண்டில், விசயநகர மன்னர்களின் நேரடிப் பேராளராகத் தமிழகத்தில் ஆட்சியை நிறுவிய தெலுங்கு நாயக்கர் ஏராளமான தெலுங்குக் குடும்பங்களைத் தமிழகத்தில் குடியேற்றி, சீர்மிகு தமிழுக்கும், தமிழருக்கும் கேடு விளைவித்தனர். தமிழ் மண்ணில் (திருவேங்கடம் முதல் குமரிமுனை வரை) அப்போது குடியேறிய தெலுங்கர், மண்ணின் மக்களான தமிழரைவிட, செல்வ வளத்துடன் இன்று வரை வாழ்ந்து வருவதுடன். தம்மொழிப்பற்றை அவ்வப்போது வேண்டுகோள்களாகத் தமிழக அரசுக்கு விடுத்து வருகின்றனர். இவ்வேண்டுகோள்கள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டியவை, இல்லையெனில் 1956-இல் நடந்த மொழி வழி மாநிலப் பிரிவினையில், தமிழகத்தின் வடவெல்லையாய்க் கழகக் காலத்திலிருந்து அமைந்த வேங்கடத்தை, ஏமாளித் தமிழர், தெலுங்கரிடம் இழந்தது போல், எஞ்சிய தமிழ் மண்ணையும் அவர்களிடம் இழக்க நேரிடும். தமிழின் முதல்பகைவர் இந்தி பேசுவோர் அல்லர்; வெளிக்குத் தமிழராகத் தம்மைக் காட்டிக்கொண்டு, வீட்டுக்குள் தெலுங்கு பேசிக் கொண்டு இருப்போரே! அண்டிக் கெடுக்கும் பகைவர் இவர். ஆந்திரம் பிரிந்தபோது வெளியேறாமல், இங்கேயே இருந்து கொண்டு, தமிழுக்கும், தமிழருக்கும் இவர்கள் ஏற்படுத்தும் இழப்புகள் ஏராளம். ''திராவிடம், திராவிடர்'' என்ற சொற்கள் தமிழகத்திற்கு வெளியே செல்லாக்காசுகள்; மூத்த திராவிடரான தமிழருக்கும், அவரது மொழிக்கும் ஆந்திர, கருநாடக, கேரள மாநிலங்களில் எவ்வகை மதிப்பும் இல்லை. எனவே, இருமொழித்திட்டம் (தமிழ், ஆங்கிலம்) 27 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள மாநிலத்தின் முதலமைச்சர் என்ற

முறையிலும், தமிழ்மொழி, தமிழர் நலனில் உண்மையான அக்கறையுடைய தமிழ்க்காவலர் என்ற முறையிலும், தமிழ்மொழி, தமிழர் நலனில் உண்மையான அக்கறையுடைய தமிழ்க்காவலர் என்ற முறையிலும், தாங்கள் உடனடியாக எடுக்கவேண்டிய தீர்மானங்கள் கீழ் வருமாறு:

(1) தமிழகத்தில், தமிழ் (முதலாட்சி மொழி), ஆங்கிலம் (துணை ஆட்சி மொழி) என்ற இரு மொழிகளைத் தவிர வேறெந்த மொழியும் ஆட்சி மொழியாக இயலாது என்ற கருத்தைத் தெலுங்கருக்கு உணர்த்துவது. மொழிவாரி மாநிலப் பிரிவிற்குப் பின்னும், இங்கே தங்கி வாழும் தெலுங்கரும், மற்ற மொழியாளரும். தமிழைத் தாய்மொழியாக ஏற்றுத் தமிழராக வாழ முயலவேண்டும் என்ற கருத்தைப் பொதுக் கூட்டங்களில் வலியுறுத்துவது.

(2) தமிழைக்கட்டாயப் பாடமொழியாகத், தமிழ் பயிற்றுமொழியாக இல்லாத பள்ளிகளில் (ஒன்று முதல் எட்டு வகுப்புகள் வரை) இக்கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தல்; தமிழ் பயிற்று மொழிப்பள்ளிகளில் தமிழுடன் ஆங்கிலத்தையும் செம்மையான முறையில் கற்பிக்க வழிவகை செய்தல்;

(3) ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளிகளின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைக்க வழிவகை செய்தல்;

(4) தமிழகத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வரும், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத குடும்பங்களை "மொழிச் சிறுபான்மையினர்" என்ற பிரிவிலிருந்து விலக்கி, அதற்கான சலுகைகளையும், நீக்கல். அனைத்திந்திய அளவில் இம்முறை செயல்படும் வகையில், இந்தியச் சட்ட அமைப்பை மாற்றியமைக்குமாறு, நடுவண் அரசிற்குத் தமிழக அரசு வேண்டுகோள் விடுத்தல்;

(5) இந்திக்கு நிகரான அளவில் ஆங்கிலமும், இந்தியத் துணைக் கண்டத்தின் இணைப்பு மொழியாக ஆக்கப்படும் வகையில், இந்திய அரசியலமைப்பை மாற்றும்படி நடுவண் அரசிற்கு வலியுறுத்தல்;

மடலின் படி, தென்மொழிக்கு;

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா	24.00
அரையாண்டுக் கட்டணம்	:	,,	12.00
தனியிதழ்	:	,,	2.00

நூல் நிறை

நூல்: சிவப்பு மலர்கள்.

ஆசிரியர்: கடலூர் மணிமாறன்:
வெளியீடு. மணிமேகலைப் பதிப்பகம்,
சின்னதாராபுரம், 639 202.

பக்கங்கள்-128 விலை-உரு, 10.00

ஆடத்தெரியாதவள் அரங்கம் கோணல் என்றுளாம். அப்படி இன்றைய புதுப்பாவலர்கள்! தமக்கு இலக்கணம்-யாப்பு கைவர வில்லை என்பதால் தத்துப்பித்தென்று பிறமொழிச் சொற்களைக் கலந்து, வெகுவாக வடசொற்களைக் கலந்து, தாம் எழுதும் உரை நடைத் தொடர்களையே ஒடித்து ஒடித்துப் போட்டு, அதையே பா அ'தாவது புதுப்பா என்று சொல்லித்திரியும் மொழி, மரபு, சந்தம், நடை ஆகியவற்றைக் கெடுப்பார்களுக்கிடையில் கடலூர் மணிமாறன் ஓர் அருமையான மரபு வழுவாப் பாவலர்; யாப்புச் சிதையாதெழுதும் திறம்பெற்ற பாவலர். சிலரோ மரபு மறந்து இன்று புதுப்பாப் போக்கினராய் மாறியது ஏன்—என்பது விளங்கவில்லை.

உணர்ச்சிக்கேற்ற யாப்பைத்தேடி, யாப்புக் கேற்ற சொற்களைத் தேடிக் கற்பனை நயஞ்சிதறாது பாடல்களை எழுதுவதற்கு அவர்கள் சோம்பல் உறுகின்றனர் என்று நாம் கருதுகின்றோம். கடலூர் மணிமாறன் அப்படிக்கில்லாது முயற்சி எடுத்துத் தமது கற்பனைக்கு, உணர்ச்சிக்கு வடிவம் தந்து பாடல்கள் எழுதுவதில் வல்லவர். அவரது 'சிவப்பு மலர்கள்' என்னும் இந்நூலுள் உள்ள மலர்கள் அனைத்தும் மரபுப் பாமலர்கள். ஒவ்வொரு மலரும் இனிய, எளிய சொல்லிதழ்களுடன், கருத்து மணத்துடன், கற்பனை நயத்துடன், அழகுடன் மிளிர்கின்றது. மேட்டுநிலத்திருந்து பள்ளமடைக்குப் பாய்ந்துவரும் வெள்ளத்தின் ஓட்டம் உடையது இவரின் பாடல்கள்.

இந்நூலுள் அவரது பாடல்வரி ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்துக் கூர்வாளாக மிளிர்கின்றது. குமுகாய மாற்றம் வேண்டும் புரட்சி மலர்களாகச் சிரிக்கின்றது. தூங்குகின்ற தமிழகத்தைத் தட்டியெழுப்பும் கதிர் வீச்சாக அவை நமக்குத் தெரிகின்றன.

"தலைவருக்கோ குறைவில்லை தமிழர் நாட்டில்;
  தன்மானம் பறிபோகும் நிலையில் கூட
அலைகின்றார் சுருட்டுகின்ற வழிகள் தம்மை
  ஆராய்ந்து காண்கின்றார்! பரத்தை யர்போல்
விலையாகும் கலையினிலே தேர்ந்தார்; அந்நாள்
  வீரத்தைக் காலடியில் விற்றார்! வீணே
குலைநடுங்கிச் சாகின்ற போக்கி னாலே
  கொத்தடிமை ஆகியநாம் மீள்வ தென்றோ?" (பக்கம் 98)

எனக் கேட்கும் இவரது கேள்வியில் எத்துணை ஆற்றாமை புலப்படுகின்றது!

''வேலையில்லை இளைஞருக்கு!.................

....

பாலையெனத் துயர்வருத்தும் வாழ்க்கை யிலே
பட்டமரம் போலானார் எளிய மக்கள்!'' (பக்கம் 104)

''தொண்டுள்ளம் எவர்க்கு மில்லை;
தோழமை உறவு மில்லை;
கொண்டதே கோலம் என்னும்
கோணல்கள் குறைய வில்லை!'' (பக்கம் 124)

இன்றை தமிழகத்தின் அவலத்தைப் பாவலர் சித்திரித்திருக்கும் இப்பாடல்களைப் படிக்கும் பொழுது நம் நெஞ்சம் அழுகின்றது! உயிர் துடிக்கின்றது! விடிவும் கிடைக்காதா என்று ஏங்குகின்றது.

இவரது பாடல் வரிகள் எல்லாமே கூரியவாள்! பகைகளை வீழ்த்தும் வேல்! சுவைக்கத் தகுந்த இனிய தேன். கூன் விழுந்து கிடக்கும் தமிழர் கூன் நிமிர வைக்கும் மாமருந்து!

எழுச்சியுடன் கருத்துணர்ச்சிப் பாடல்களைத் தந்திருக்கும் பாவலர் காதல் தோல்வி கண்டிருப்பார் போலும்!'' பயிர் செய்யா நிலம்'' என்னும் ஒரு பாடலில் தன்னையே முன்னிலைப்படுத்தி ஒரு முகவுரை தந்திருக்கின்றார். தலைவியின் போக்கு எண்ணி வருந்துகின்றார். பாடல் பிரிவாற்றாமை உணர்ச்சியுடன், ஏமாற்ற உணர்ச்சியலைகளையும் ஏந்திச் சிறப்பாக இருக்கின்றது.

''செல்லரித்த ஏடாகப் போகும் வண்ணம்
சிதைத்ததுமேன்? துளைத்ததுமேன்? செப்பு வாயா?
(பக்கம் 109)

பாவலரின் தோல்வி நமக்குப் புரிகிறது: தோல்வியில் துவளாது தூயதமிழ், இனம், நாடு என்னும் கொள்கை நோக்குடன் பாவலர் தொடர்ந்து பாடல்களைத் தருதல்வேண்டும். தமிழகம் அவரிடம் நிறைய எதிர் பார்க்கிறது.

பைந்தமிழ்ச் சோலை, பாவலர் மேடை, வளரும் தலைமுறை, நெருப்பு நினைவுகள், நெஞ்சின் நிழல்கள், ஆகிய ஐந்து தலைப்புகளின் கீழ் இருபத்தொன்பது பாடல்கள் உள்ளன. பாட்டுணர்வு உடைய ஒவ்வொருவர் கைகளிலும் இருக்கவேண்டியது இந்நூல்; வளரும் பாவலர்க்கும் உணர்வு வகையில் இ'து உதவும்.

தமிழ்ச்சுடர் இளமுருகு பாராட்டுரையும், புலவர் இரா. இளங்குமரனார் ஆய்வுரையும் வழங்கியுள்ளனர்.

காகிதப்பூ, புவி போன்ற வடசொற்களைப் பாடலில் தவிர்த்திருக்கலாம்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் வழங்கியிருக்கும் வாழ்த்துப்பா நூன்முகப்பில் நூலை அணி செய்யுமாறு இருப்பது நூலுக்கு ஒரு தனிப் பெருமை! பொலிவு!

பாவேந்தன் பாரதிதாசனார், பாவலரேறு பெருஞ்சித்திரனார் வழி தொடரும் பாவலருக்கு நம் நல் வாழ்த்துகள். —அரிமா

சிந்து வெளி நாகரிகத்தின் தொடர்ச்சி

இவ்வாண்டுத் தொடக்கத்தில், குசராத் மாநிலத்தில், கச்சரான் என்னும் பகுதியில் உள்ள தோலாவீரா என்னுமிடத்தில், சிந்து வெளி நாகரீகத்தின் மிகச் சிறந்த பண்டைய நகரங்களான அரப்பா, மொகஞ்சதாரோ போன்ற ஒரு நாகரிக நகரம் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பே, இந்த இடத்தில் ஒரு பெருநகர் புதைந்து கிடக்கலாம் என்று, இந்தியத் தொல்லியல் துறையின் தலைவர் சகத்பதி சோசி என்பவர் கண்டறிந்து கூறியுள்ளார். ஆனால் இப்பொழுதுதான் இரவீந்திர சிங் பிசுத் என்னும் தொல்லியல் ஆய்வாளர் தலைமையில் பெரிய அளவில் அகழ்வாய்வு தொடங்கி அங்கு ஒரு பெருநகரம் புதைந்து கிடப்பது உண்மை என்று கண்டறியப் பெற்றது.

அகழ்வாராய்ச்சியாளர்கள் ஏறத்தாழ இரண்டு மாதங்கள் அந்த இடத்தை மிகக் கவனமாக அகழ்ந்து ஒரு பெரிய நகரத்தின் அமைப்பைக் கண்டுபிடித்துள்ளார்கள். இந் நகரின் பரப்பு 48 எக்டேர் அளவு உள்ளது. நகரைச் சுற்றிலும் செங்கற்களால் கட்டப்பெற்ற மதில் சுவர் அமைந்துள்ளது. மூன்று பகுதிகளாக அந்நகர அமைப்பை அவ்வாராய்ச்சியாளர்கள் பகுத்து, அவற்றுக்கு அகநகர், இடைநகர், புறநகர் என்று பெயரிட்டுள்ளனர். மற்றும் இந்நகர அமைப்பும் சிந்து வெளி நகரங்களைப் போல, குறுக்கும் நெடுக்குமான வீதிகளைக் கொண்டதாக இருக்கிறது; இதுவும் சதுர வடிவில் அமைந்துள்ளது தெரிய வந்துள்ளது.

அக நகரில், இரு உட்பகுதிகள் உள்ளன. அவற்றுள் ஒன்று அரண்மனையாகும். இதற்கு மூன்று வாயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தலைவாயில் வடக்குத் திசை நோக்கி அமைந்துள்ளது. ஓர் உயர்ந்த கல்தூண் இந்த அரண்மனையின் சிறப்புக்குச் சான்றாகக் கிடைத்துள்ளது.

நகரிலுள்ள வீடுகளிலிருந்து கழிவு நீர் வெளிப்பட்டுச் சாய்க்கடைகள் வழியாக ஓடுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் இருப்பது இந்த நாகரிக நகரத்தின் ஒரு சிறப்புத் தன்மையாகும்.

சங்கறுத்தல், பாசிமணிகள் செய்தல் போன்ற தொழில்கள் இந்த நகரத்தில் செய்யப் பெற்று வந்தன என்று அறியப் பெறுகிறது. சிந்து வெளியில் கண்டுபிடிக்கப் பெற்ற எழுத்துகள் பொறிக்கப் பெற்றுள்ள இலச்சினைகள், முத்திரைகள், செப்புப் படிமங்கள், தங்கம், மணிக்கற்கள், சங்கு வளையல்கள், செப்புக் கருவிகள், உலக்கை, கல்உரல், அம்மி போன்ற வீட்டுப் புழக்கப் பொருள்கள் அங்கிருந்த பல வீடுகளிலிருந்து கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன.

சிந்து வெளிக்கும், குசராத் பகுதிக்கும் இடையே அமைந்துள்ள தோலாவீரா, சிந்து வெளி மக்களின் முகாமையான வணிக நடுவமாக விளங்கியது என்று தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

தென்மொழி
30-ஆம் ஆண்டு நினைவுகள்!

இயல்: 1, இசை: 2. (17—8—59)

சாக்ரடீசு (469-399 கி. மு.)

மக்கள் அறியாமையிலும், ஒழுங்கின்மை என்னும் இருளிலும் மூழ்கிக் கிடந்த நேரத்தில், (கிரேக்க நாட்டில்) 'ஏதென்சு' நகரில்—ஒளிவிளக்காகத் தோன்றியவன் சாக்ரடீசு. அறிவழகு நிரம்பப் பெற்ற அவன் உடலழகு சிறிதும் இல்லாதவன். அழுந்திய தட்டை மூக்கும், முன் தள்ளிய வயிறும், அம்பு போன்ற கூரிய விழிகளும் கொண்ட எளிய உருவினன். அவன் எழுதியதாக எந்த நூலும் வெளிவரவில்லை. அப்படியிருந்தும் அவன் உலகின் மிகச் சிறந்த மெய்யறிவாளன், ஏதென்சு பெற்றெடுத்த பேரறிஞர்களுள் முதன்மையானவன் என்பதை நாம் அறிகிறோம். அவன் பெயர் உலகெங்கணும் நன்மதிப்பைப் பெறுகின்றது.

அவனது அறிவின் மேம்பாட்டினால் அவன் குன்றிலிட்ட விளக்காகத் திகழ்ந்தான். பிறர் வாழ்க்கைக்கு வழிகாட்டிய அவனது நேர்மை, அவனுடைய இறுதிக்கு வழிகோலியது. நல்ல மாந்தரை உலகம் வாழ விடுவதில்லை. உலக வரலாறு என்னும் கருந்துணியினூடே தங்க இழை போன்றது அவன் வாழ்க்கை.

அவனுடைய நெருங்கிய நண்பர்களான பிளாட்டோ (Plato), செனோபன் (Xenophon) முதலியவர்களின் எழுத்துகளிலிருந்தே அவனைப் பற்றித் தெரிந்து கொள்கிறோம்.

பிளாட்டோ, தான் எழுதிய நாடக உரையாடல் நூல்களில் சாக்ரடீசை முதன்மையான நடிகனாக உலவ விடுகிறான். அந்தப் பேரறிஞனின் பேச்சுத் திறனும் தன் கொள்கையை நிலைநாட்ட, கைக் கொண்ட சொல் வன்மையும், உண்மையைத் தெளிவுறுத்துவதற்காகத் தானாகவே கேட்டுக் கொண்ட வினாக்களும், அவற்றின் விடைகளும், வாழ்க்கை—சாவு இவை பற்றிய எண்ணங்களும் அந்த உரையாடல் நூல்களில் தெளிவாகக் காணக் கிடக்கின்றன.

அவன் ஒரு சிறிய வட்டத்தினுள்ளிருந்துதான் அறிவு முழக்கம் செய்தான். ஆனால் அந்த முழக்கம் இன்னும் உலகின் ஒவ்வொரு மூலையிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

உலகத்திற்கே ஒளி வீசிய அந்த அறிவு விளக்கு கி.மு. 469-ஆம் ஆண்டில் ஏதென்சு நகரில் ஏற்றிவைக்கப் பெற்றது. அக்காலத்தில் கிரேக்க நாடுகளுக்குள்ளே ஏதென்சுதான் மிகப் புகழும் வலிமையும் பெற்று விளங்கியது. கல்வியும், கலைகளும், வணிகமும் அதற்கு முன் என்றும் இல்லாதவாறு செழித்தோங்கியிருந்தன. ஏதென்சின் பொற்காலம் என்று புகழப்பட்ட அந்த நாளில்தான்

சாக்ரடீசு பிறந்தான். அவன் தந்தை கருங்கற்களுக்கு உருவேற்றும் ஒரு சிற்பி. அவனுக்குப் பிறந்த இவனோ, மக்கள் இனத்தின் சொரசொரப்பான மேடுபள்ளங்களை மெய்யறிவென்னும் சிற்றுளியால் ஒழுங்குபட வழவழப்பாக்கித் தந்த ஒரு சொற்சிற்பியாக விளங்கினான். சாக்ரடீசின் இளமைக் காலத்தில் அவனுடைய தந்தையின் சிற்பவேலை அவனைப் பிடித்திருந்தது. எனினும் சில காலத்திற்குப் பின் தாயின் தொழிலான மருத்துவத்தைப் பின்பற்றினான். ஆனால், இவன் உடற்பிணியாளர்களுக்கு மருத்துவம் செய்வதை விடுத்து, அறியாமைப் பிணியாளர்களுக்காகவே பாடுபட்டான். இவனே வேடிக்கையாக இதைக் கூறிக் கொள்வதுண்டு.

ஏதென்சின் மற்ற குடிகளைப் போலவே இவனும் போர்ப்படையில் சேர்ந்து நாட்டுப் பணி புரிந்தான். ஒரு போரில், அல்கபியாடிசு என்ற பெருமகனின் உயிரைக் காத்தான். அவன் பிற்காலத்தில் சாக்ரடீசின் மாணவருள் ஒருவனானான். 'டெலியம்' 'ஆம்பிபோலிசு' ஆகிய போர்களில் முன்னின்று தன் திறமையைக் காட்டி, எல்லாருடைய பாராட்டையும் பெற்றான். போர்ப்படையிலிருந்து விலகிய பின்னர் எஞ்சிய வாழ்க்கையின் பெரும் பகுதியினைச் சாக்ரடீசு பேசியே கழித்தான். அன்று பேசிய அந்தப் பேச்சு இன்று வரை, பேரறிஞன் என்றும், மெய்யறிஞன் என்றும் உலகோர் கொள்ளத் தக்க பெரும் புகழை அவனுக்குத் தேடித் தந்தது.

மிகவும் எளிமையான உடைகளை அணிந்து கொண்டு காலை வேளைகளில் ஏதென்சு நகரத்தெருக்களிலும், திறந்த வெளிகளிலும் அலைந்து கொண்டிருப்பான், சாக்ரடீசு. கோடையில் காய்வான்; மழையில் நனைவான்; பனியில் உடல் குளிரக் குளிர அலைவான். அவன் உடலுக்குக் குப்பாயமோ (Coat), காலுக்கு மிதியடியோ அவன் அணிந்ததில்லை. அவன் ஏழ்மையைத் துளியும் பொருட்படுத்த மாட்டான். அது தனக்குக் கிடைத்த வாழ்வாகவே எண்ணி அமைதியாக ஏற்றுக் கொண்டான். அறிவையும் மக்கள் உயிரையும் பெரிதாக எண்ணி அலைந்த அவன் பிற எளிய பொருளைப்பற்றிப் பொருட்படுத்தாதது இயல்பே.

அவன் பட்ட துன்பங்களை அண்டிபேஃன் என்பவன் எழுதும் போது, "ஓர் அடிமையால்கூட அவன் பட்ட தொல்லைகளைத் தாங்க இயலாது. அந்த அடிமைகூட அத்துன்பத்தைக் கண்டு அஞ்சி ஓடியிருப்பான்"—என்று குறிக்கிறான்.

வறுமைத் தொல்லைகள் அவனை அச்சுறுத்தவில்லை. அவன் அவற்றைக் கண்டு அஞ்சி ஓடி ஒளியவுமில்லை, ஏதென்சு நகர எல்லைக்கு வெளியே சிற்சில காலங்களில் அவன் சென்றதுண்டு; நாடு நகரங்களைப் பற்றியோ, அரசர், செல்வர் தம்மைப் பற்றியோ அவன் கவலைப்பட்டதில்லை. பொதுவான உலக மாந்தரே அவன் பேச்சிற்கும் எண்ணத்திற்கும் ஆளானவர்.

மக்கள் கூடும் சந்தை வெளிகளையும், தெருமுனைகளையும் தன் சொற்பொழிவு மேடைகளாக அவன் ஆக்கிக் கொண்டான். அங்குப் போவோர் வருவோரையும் தெருவோரங்களில் ஒன்றிக் கிடப்போரையும் தன் உயர்ந்த பேச்சைக் கேட்க வந்த பெருங்கூட்டமாக எண்ணிக் கொண்டான். இவன் பேச்சை உயர்ந்தவர், தாழ்ந்தவர், கற்றவர், கல்லர்தவர் என்ற வேறுபாடு இன்றி யாவரும் விரும்பிக் கேட்டனர். அவன் தனக்குத் தானே வினக்களை ஏற்படுத்திக் கொண்டு, அதற்குரிய விடைகளை அக் கூட்டத்தின் முன் உரக்கக் கத்தினன். அவனுடைய கேள்விகளிலும் கூறும் விடைகளிலும் சிறுவரும் புரிந்து கொள்ளத் தக்க எளிய விளக்கங்களைக் காணலாம். ஒழுக்கமே அவனது வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது. ஒழுக்கத்தை உயிர் என்றான்; அதையே அறிவு என்றான்; அதைக் கொண்டவரையே மக்கள் என்று மதித்தான். கல்வி கேள்வியும், செல்வமும் சீர்மையும் ஒருவனை உண்மையான மாந்தனாக ஆக்கிவிட முடியாது. ஒழுக்கம், நேர்மை என்ற உயர்ந்த பண்புகளே ஒருவனை உண்மையான மாந்தனாக்க முடியும் என்பதே அவன் மக்களுக்குக் கூறிவந்த உயர்ந்த எண்ணங்களாகும்.

அவன் வாழ்வின் சிறு பகுதியைப் பொது வாழ்க்கையிலும் ஈடுபடுத்தியிருந்தான். அக் காலங்களில் அவன் நேர்மையின் முகட்டினின்று அணுவளவும் சறுக்கியதில்லை. மனத் திண்மையும் செயலுறுதியும் உள்ள அவனைப் போன்றவராலேயே அவ்வாறு இருத்தல் கூடும்.

ஒரு கால், அவன் நகராண்மை உறுப்பினனாக இருந்த பொழுது, ஏதெனியப் படைத்தலைவர்கள்மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டது. மக்களின் உறுதிப்பாட்டின்படி அப்படைத் தலைவர்கள் கொலைத்தண்டம் சுமத்தப்பட்டனர். இதைக் கழக உறுப்பினர்கள் யாவரும் ஒப்புக் கொண்டனர். அப்போது கூட சாக்ரடீசு அதைத் தடுத்தான். அவனை எதிர்த்த மக்கள் குரலுக்கு அவன் அஞ்சவில்லை. நேர்மைக்கு அவன் பாடுபட்டான். கி. மு. 404-இல் ஏதென்சின் ஆட்சிப் பொறுப்பு முப்பது பேர்களைக் கொண்ட ஒரு குழுவின் கையில் வந்தது. அப்போதும் சாக்ரடீசின் நேர்மையை அறிந்து கொள்ள ஒரு சூழல் உண்டானது. நேர்மையற்ற முறையில் சிலரைச் சிறை செய்யுமாறு அவன் ஏவப்பட்டான். ஆனல், சாக்ரடீசு அதை மறுத்தான். அது தன் உயிருக்குக் கேடு செய்யும் என்பது அவனுக்குத் தெரியும். ஆனல், அந்நிலையில், அக்குழுவின் ஆட்சியே கவிழ்ந்து போக, அவன் உயிர் பிழைத்தது.

சாக்ரடீசு இறப்புக்கு அஞ்சவில்லை. தன் உள்ள நெறியையும் இயற்கை நிகழ்ச்சிகளையும் அவன் நம்பினன். ஏதென்சு மக்கள் வழிபட்டு வந்த பழங்கடவுள்களை அவன் நம்பவில்லை. அந்தப் பழங் கொள்கைச் சமயங்களிலும் அவன் மூழ்கியிருக்கவில்லை. ஒவ்வொரு மாந்தனிடமும் இருக்க வேண்டிய நேர்மையும் ஒழுங்குமே அவனது சமயமாக இருந்தன.

அவனிடம் நாம் காண்கின்ற பேராற்றலெல்லாம், அவன் இருபத்துநான்கு மணி நேரமும் ஆழ்ந்த எண்ணங்களில் மூழ்கிக் கிடந்ததுதான். தன் உள்ளத்திற்கு நேர்மை என்று பட்டதை அவன் செய்ய என்றும் தயங்கியதில்லை. சாக்ரடீசு பொது வாழ்விலேயே தொடர்ந்து ஈடுபட்டு மக்கள் ஒவ்வொருவரையும் மகிழ்விக்கக்கூடவில்லை. அவனுடைய நேர்மையான சிறந்த பேச்சுகள் சிலர்தம் மனத்தை உறுத்தின.

கி. மு. 423-இல் 'அரிக்டோபான்ஃசு' என்ற நகைச்சுவை நாடக ஆசிரியன் தான் எழுதிய 'முகில்கள்' என்ற நாடகத்தில் சாக்ரடீசை எள்ளி நகையாடுகிறான், அதில் சாக்ரடீசு ஓர் அரைக் கிறுக்கனாகவும், மெய்யறிவென்னும் கடை விரித்துக் கொண்டு, இளைஞர்க்குப் பொய்யையும் தகுதியற்ற எண்ணங்களையும் ஓயாமல் பறைசாற்றும் கிழவனாகவும் காட்டப்பட்டுள்ளான். நாடக ஆசிரியனின் இத்தகைய செயல் நகரச்செல்வர் சிலரின் தூண்டுதலால் உருவானதாகும். ஆனால் இந்தச் சூழ்ச்சியினால் சாக்ரடீசின் புகழ் குன்றிவிடவில்லை. இவன் காலத்திலேயே வாழ்ந்த புலவன் ஒருவன், இவனைப் பற்றிப் பின் வருமாறு கூறுகின்றான்,

"நான் சாக்ரடீசை வெறுக்கிறேன். அதற்குக் காரணம் அவன் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களைப் பற்றியும் ஓயாமல் எண்ணி உண்மை காண்கிறான். ஆனால் தன் சோற்றுக்கு வழி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை ஒரு நொடியும் எண்ணவில்லை. அதை மறந்தே விடுகிறான்."

எப்பொழுதும் மக்கள் அவன் சொற்பொழிவைக் கேட்க வேட்கையுற்றிருந்தனர். அவர் தம்முள் சிலர் அவனுடைய அறிவையும் பேச்சுத் திறனையும் வியந்து அவற்றைத் தாமும் கற்றுக் கொள்ள முயன்றனர். சிலர் அவன் அறிவுரைகளின்படி தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்பினர்.

சாக்ரடீசின் மாணவர் குழுவில் இருந்தோர் பல திறப்பட்டவராவர். ஆட்சிக் குழுவின் முப்பதின்மரில் ஒருவனான கிரீட்டசு, அல்சிபிடியாசு, பிளாட்டோ, செனோபன், இரண்டாம் பெரிக்கிள்சு, சிபெசு, மெய்யறிஞன் தேபன், புகழ் பெற்ற துன்பியல் நாடக ஆசிரியன் எரிபெடசு ஆகியோர் சாக்ரடீசின் தலையாய மாணவர்கள். அவர்களெல்லாரும் சாக்ரடீசிடம் தாமாகவே மாணவர்களாக வந்து சேர்ந்தனர். தன் கொள்கைகளைப் பரப்புவதற்காக அவன் தனிப் பயிற்சியோ, பள்ளியோ நடத்தவில்லை.

அவன், அவர் தம் பால் வினாக்களை எழுப்புவதும், அவர்கள் தம் வாய்களிலிருந்து விடைகளை வருவிப்பதும் ஆன வகையாலேயே அவர்க்கு அறிவொளி ஊட்டினான்.

சாக்ரடீசுக்கு இரு மனைவியர் இருந்தனர். முதல் மனைவிக்கு இரு ஆண் குழந்தைகளும், இரண்டாவது மனைவிக்கு ஒரு பையனும் இருந்தனர். இரண்டாவது மனைவி ஓர் அடங்காப் பிடாரி

என்று கூறுகின்றனர்: ஆனால், அதற்கு எவ்வகையான அடிப்படையும் இல்லை. அவ்வாறு இருந்திருப்பினும், பலருடனும் பேசி மகிழ்வதிலேயே தன் வாழ்நாள்களைப் போக்கிக் கொண்டிருந்த வறுமை போர்த்த ஒரு மெய்யறிவாசிரியனை மணந்து கொண்ட பெண் ஒருத்திக்கு அத்தகைய மனநிலைகள் இருந்திருக்கக்கூடும் என்று கருதலாம்.

கி. மு. 399-இல், சாக்ரடீசுக்கு எழுபது ஆண்டுகள் நடந்து கொண்டிருக்கும் போது, அவனுடைய பகைவர் அவன் மேல் பழி தீர்த்துக் கொள்ள, வழக்கு ஒன்றைத் தொடர்ந்தனர்; அப் பேரறிஞன் மேல் இரு குற்றங்கள் சாற்றப்பட்டன;

ஒன்று, எல்லாரும் போற்றும் அந்நாட்டுக் கடவுளிடம் அவன் நம்பிக்கையற்றிருக்கிறான் என்பது. இரண்டாவது, அங்குள்ள இளைஞர்களைத் தன் பேச்சுத் திறத்தால் தவறான வழியில் செலுத்துகிறான் என்பது.

'உலேசியசு' என்ற சிறந்த பேச்சாளன் சாக்ரடீசைத் தப்புவிக்க ஒரு நீண்ட முறையீடு எழுதிக் கொடுத்தான். ஆனால், சாக்ரடீசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அஃது அறிவுள்ள செயலன்று என்றும், கோழைத்தனமே என்றும் கூறி மறுத்து விட்டான்.

உள்ளத்தின் உறுதியாலும், செயல் கவர்ச்சியாலுமே ஒரு மெய்யறிவாளன், குன்றிலிட்ட விளக்காகத் திகழவேண்டும் என்பது அவன் கொள்கை!

சாக்ரடீசு தன் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை மறுத்து வழக்காடவில்லை. அரச மன்றத்திலும் பெருந்தன்மையோடும் பணிவோடும் எளிமையான சொற்களால் தன் கொள்கைகளை வலியுறுத்திக் காட்டினான்.

''மக்கள் இன்பமாக வாழவேண்டும் என்பதற்காக என் உடைமையான பேச்சுகளை ஏதென்சு மக்களுக்காகச் செலவிட்டேன். இ'து இயற்கையால் எனக்கென்று ஏற்படுத்தப்பட்ட கட்டளையாகும். இந்த அறமன்றம் கூடியிருந்து முடிவு கட்டும் தீர்ப்பைவிட இயற்கை எனக்கு ஏற்படுத்திய அந்தத் தீர்ப்பை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்.''

—இவ்வாறு சாக்ரடீசு அறமன்றத்தில் கூறினான். இந்தப் பேச்சு மன்றத்தாரை மிகவும் வருத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் அவன் பேசினான்:

''நீங்கள் எனக்குத் தண்டம் அளிப்பது, நான் உண்மையைத் தேடி உழைப்பதைத் தடுப்பதாகவே இருக்கிறது. அ'து அவ்வாறானால், ஏதென்சு மக்களே! உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இயற்கை என்னை இந்தப் பணிக்காகவே ஏவியிருக்கிறது; அதற்கான வலுவையும் கொடுத்திருக்கிறது என்று நான் கருதுகின்றேன். அதற்கே நான் என்றும் பணிவேன்; என் உயிருள்ள வரை நான் பேசுவதை நிறுத்திக் கொள்ள மாட்டேன். என்னை

வந்து காண்பவர்களிடமும், என்னைக் காணுமல் புறம் போவோரிடமும் நான் ஓயாமல் பேசியே தீருவேன். அறிவையும் உண்மையையும் பெற்றுத் தூய்மையடைவதை விடுத்து, உங்கள் உள்ளத்தைச் செல்வப் படுகுழியிலும் நாகரிகச் சேற்றிலும் மூழ்கடிக்கின்றீர்களே, இதுபற்றி நீங்கள் நாண வேண்டும். என்னுடைய அறிவுத்திறனுல் எல்லா மக்களையும் கெடுத்து வருகிறேன் என்று குற்றம் சாட்டியிருக்கின்றீர்கள். எனக்கு அறிவிருப்பதாக நான் கருதவில்லை: ஆனுல் மற்றவரைவிட நான் ஒரு வகையில் வேறுபட்டவனுக இருக்கிறேன். மற்றவர் ஏதும் தெரியாதவராயிருந்தும் எல்லாம் தெரிந்தவர் என்று சொல்லிக் கொள்கின்றனர். நானே ஒன்றும் அறியாதவன் என்பதை அறிந்து கொண்டிருக்கின்றேன்.''

''இளைஞருடைய ஒழுக்கத்தைக் கெடுத்து வருகின்றவன் நான் என்பதாக என்மேல் வேறு ஒரு குற்றமும் சாட்டுகின்றனர். ஆனுல், நான் ஒன்று கேட்கிறேன். என் ஒருவனுடைய பேச்சால் இளைஞரெல்லாரும் கவரப்படுகின்றனர் என்ருல், உங்கள் எல்லாருடைய நேர்மையாலும் கட்டுப்பாட்டாலும் அவர் என்பால் நெருங்குவதை ஏன் தடுக்க முடியவில்லை?...நீங்கள் எனக்குக் கொடுக்கப் போகும் தீர்ப்பு என்ன என்பதை நான் அறிவேன். இறப்பைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. அ'து ஒருவேளை நல்லதாகவும் இருக்கலாம்; அதற்கு நான் அஞ்சவில்லை. ஆனுல், ஒன்று மட்டும் அறிவேன். தீமையிலும் நன்மை இருக்கிறது என்பதே அது.''

இந்தப் பேச்சைக் கேட்டதும், சாக்ரடீசு குற்றவாளி என்றே கருதி அவனுக்குக் கொடுக்கப் போகும் தண்டம் பற்றி முடிவு செய்யப்பட்டது. முடிவில் இறப்புத் தண்டனை கொடுக்கப்பட்டது. அக் காலத்துச் சட்டப்படி குற்றவாளி இறப்புத் தண்டனைக்கு மாருக வேறு தண்டனையைக் கேட்டுக் கொள்ளும் உரிமை இருந்தது.

''என்ன தண்டனை ஏற்றுக் கொள்கிருய்?'' என்று மன்றத்தினர் கேட்டனர், ''என்னை நாடு கடத்தி விடுங்கள்'' என்று இவன் கேட்டிருந்தால், மன்றத்தார் அவ்வாறே தீர்ப்புக் கூறியிருக்கக்கூடும். ஆனுல் அவன் கீழ்வருமாறு பேசினுன்:

''நான் என் சொற்பொழிவால் மக்களுக்கு நன்மையையே செய்தேன்: அவ்வாறு நன்மை செய்தவனை அரசியலார் தம் செலவில், வாழ்நாள் முழுவதும் காத்துப் புரத்தல் வேண்டும். அதையே நானும் வேண்டுகிறேன்.''

சாக்ரடீசின் இந்த வேண்டுகோள்: மன்றத்தினரின் சினத்தைப் பெருக்கியது. அவனுக்கு இறப்புத் தண்டனையையே வலியுறுத்தினர்; அவனுக்காக அவன் நண்பர்கள் அத்தண்டனையை நீக்குமாறு வேண்டினர். அதற்காக முப்பது ''மைனு''க்கள் (90 Shillings) ஈட்டுத் தொகை கட்டவும் அவர்கள் முன் வந்தனர். ஆனுல் சாக்ரடீசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை; ''சாக்-

டீசு நஞ்சு குடித்து இறக்க வேண்டும்'' என்று முடிவு செய்யப்-பட்டது.

சாக்ரடீசு அதைக் கேட்டுத் துணுக்குறவில்லை. அவன் அமைதியுடன் பேசினன்:

''நான் பிரியும் நேரம் வந்துவிட்டது. நான் இறக்கப் போகிறேன்; நீங்கள் வாழப் போகிறீர்கள். ஆனல், எவர் நற்-செயல்கள் செய்தார் என்பதை அறக்கடவுளைத் தவிர வேறெவரும் அறியார்...''

இடையில் ஒரு திருவிழா காரணமாக இறப்புத் தண்டனை நிறைவேற்றப்படாமல் மூன்று கிழமைகளுக்குத் தள்ளிப் போடப் பெற்றது. சாக்ரடீசு விலங்குகளால் பிணைக்கப் பெற்றுச் சிறை-யில் தள்ளப்பட்டான். அக்காலை, அவன் நண்பர்களை வரவேற்று அவர்களோடு மகிழ்ச்சியாகப் பேசி அவர்களுக்கு ஆறுதலும் கூறினன். அதுபோது கிரீட்டோ என்ற அவனுடைய மாணவன், சாக்ரடீசைத் தப்பித்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டு, அதற்கான வழிகளைத் தான் செய்வதாகவும் கூறினன். ஆனல், சாக்ரடீசு அதைக் கண்டித்தான். அறமன்றத்தார் தனக்குச் சட்டப்படி அளித்த தண்டனைக்குத் தான் பணிந்தே தீர வேண்டு-மென்று உறுதியாகக் கூறினன்.

அவனுடைய கடைசி நாளில் நண்பர்களும், மனைவியும் கடைசிக் குழந்தையும் அவனைச் சிறையில் கண்டு பேசினர். மனைவி, விம்மிக் கொண்டே, ''என் அருமை சாக்ரடீசு! இ'து உன் கடைசி நாள். இனிமேல் நீ உன் உற்ற நண்பர்களுடன் பேச முடியாது. அவர்களும் உன்னுடன் பேச முடியாது. என்னேடும் குழந்தைகளோடும் கூடப் பேசுவது இயலாது ..!'' என்று கூவி-யழுதாள்; கதறினள்; துடிதுடித்தாள்! ஆனல், சாக்ரடீசு அவ-ளிடம் ஒன்றும் பேசவில்லை. கலக்கமடையாத அவன், ''இவளை வீட்டிற்கு அழைத்துப் போங்கள்'' என்று கிரீட்டோவிடம் கூறி-னன். அவளும் பிரிக்கப்பட்டாள்.

அவளை அனுப்பிய பின், அந்தப் பேரறிஞன், அமைதியாகத் தன் படுக்கையில் சோர்ந்து உட்கார்ந்தான். விலங்குகள் இருந்த கால்களை ஒன்றேடொன்று உராய்ந்து கொண்டான். நண்பர்கள் யாவரும் அவனைச் சூழ்ந்து அமர்ந்திருந்தனர். துன்பத்திற்கும் இன்பத்திற்கும் இடையேயுள்ள உறவை அமைதியுடன் அவன் எண்ணினன். அதை நண்பர்களிடமும் கூறினன்.

அன்று மாலை சாக்ரடீசு உடல் குளித்துக் கொண்டான். அவன் குளித்து மீண்டபோது உலக ஒளி மங்கிக்கொண்டிருந்தது. கதிரவனும் மறைந்து, இருள் படர்ந்தது. மக்களின் உண்மை வாழ்விற்காகத் தன் வாழ்க்கை முழுவதையும் ஈடுபடுத்திய அம்-மெய்யறிவாளன் இறந்துபட வேண்டிய நேரமும் நெருங்கியது. அப்போது இறப்புத் தண்டனையை நிறைவேற்றும் ஆணையாளன் (அதிகாரி) அங்கு வந்தான். தன்மேல் எவ்வகை வருத்தமும்

கொள்ளவேண்டாம் என்று பொங்கிவரும் கண்ணீரை அடக்க முடியாமல் சாக்ரடீசிடம் வேண்டினன். விம்மிய வண்ணம் அவ்விடம் விட்டு நகர்ந்தான்.

சாக்ரடீசு, தான் இறப்பதற்குரிய சரியான நேரம் வந்து விட்டது என்று நண்பர்களிடம் கூறினன். 'விரைவுப்பட வேண்டாம்' என்று கிரீட்டோ கேட்டுக் கொண்டான். அதைக் கேட்டுச் சாக்ரடீசு அந்த இறக்கும் வேளையிலும் சிரித்தான். தண்டனை நிறைவேற்றுவோனை அழைத்து வருமாறு ஏவினன். நஞ்சு வந்தது. அமைதியுடன் அந்த நஞ்சுக் கோப்பையை எடுத்தான். பழக்கப்படி இறைவனுக்காகச் சிறிது கீழே ஊற்றினன. மிகுதியைத் தயங்காது குடித்தான்.

(அந்த நேரத்தில் அவனுக்கொரு நினைவு வந்தது. கிரீட்டோவை அழைத்தான். தான் பக்கத்து வீட்டுக்காரனிடம் ஒரு கோழிக்குஞ்சைக் கடனாக வாங்கியிருந்ததை அவனிடம் கூறி, தனக்காக அதைத் திருப்பிக் கொடுத்துக் கடனை அடைக்குமாறு அவன் கேட்டுக் கொண்டான்.) நண்பர்கள் யாவரும் வருத்தத்தோடு அவனைச் சூழ்ந்தனர். புன்சிரிப்போடு சாக்ரடீசு அவர்களுக்கு ஆறுதல் கூறினன். அவர்களின் கோழைத்தனத்தைக் கண்டித்தான். அவர்கள் யாவரும் அமைதியுடன் இருப்பதே தான் இறப்பதற்கேற்ற நல்ல பொழுது என்று இறுதியாக அவர்களிடம் கூறினன்.

பேசிக் கொண்டேயிருக்கையில், அவன் உடலில் நஞ்சு பரவி உறுப்புகளைக் குளிர்வித்தது. இவ்வுலக மக்களின் நலனுக்காக ஓயாது முழங்கிய அவன் நா அடங்கியது. மக்கள் இனத்தின் நன்மைக்காக ஓயாமல் எண்ணிய அவன் உள்ளம் இருண்டது. அவன் வாயிதழ்கள் புன்னகை பூத்தன. அப்பெருந்தகையாளனின் உயிர் அன்று மாலை சூழ்ந்திருந்த இருளோடு ஒன்றியது. உலக மக்களின் நெஞ்சில் நின்றிருந்த இருளை ஓட்டி, அதற்காகவே தன் வாழ்வைப் பணயம் வைத்த அப் பேரறிஞனின் உயிர் இருளோடு கலந்தது. ஆனலும் அவன் பேசிய பேச்சுகள் அந்த இருளில் உடுக்களாக (விண்மீன்களாக) இவ்வுலகம் உள்ள மட்டும் சுடர் விடும். O

"தமிழ்ச்சிட்டு"

ஆண்டுக் கட்டணம் : உருபா 12.00
தனியிதழ் : ,, 1.00

ஓரிதழுக்கு உருபா 2-00 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

'தமிழ்ச்சிட்டு', சென்னை-5

செய்திகள்

1. தமிழ் இயக்கங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம்:

கடந்த 27—2—90 அன்று, சென்னை, திருவல்லிக்கேணி, நீலி வீராசாமி தெருவில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் சங்கக் கட்டிடத்தில், வாழப்பாடி இராமமூர்த்தியின் தமிழ் இரண்டக நடவடிக்கையை எதிர்த்தும், மறைமலை நகர் தொடர் வண்டி நிலையப் பெயரை மாற்றக் கூடாது என்று வலியுறுத்தி-யும், சென்னையில் உள்ள தமிழ்ச் சங்கங்கள், கலை இலக்கிய அமைப்புகள் அனைத்தும் ஒருங்கிணைந்து தீர்மானிப்புக் கூட்டம் ஒன்றை நடத்தின. அதில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த ஏறத்தாழ 75 தமிழறிஞர்கள், அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கலந்து கொண்டார். அக்கூட்டத்தில் மறைமலையடிகள் தொடர் வண்டி நிலையப் பெயரை மாற்றக் கூடாதென்றும், அதை அரசு செயற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி ஒரு போராட்டம் நடத்துவ-தெனத் தீர்மானிக்கப் பெற்றது.

2. மறைமலையடிகள் வாழ்வியல் கருத்தரங்கம்;

சென்ற 18—3—90 காலை 9.30 முதல் மாலை 7-30 மணி வரை, திருவல்லிக்கேணி, நீலி வீராசாமி தெருவில் உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் சங்கக் கட்டிடத்தில், மறைத்திரு மறைமலை-யடிகள் கருத்தரங்கு நடைபெற்றது. காலைக் கருத்தரங்கிற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமை தாங்கினார். கருத்-தரங்கை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக இயக்குநர் திரு. முத்துக்குமாரசாமி தொடங்கி வைத்தார். வரவேற்புரையை பெரும்பாவலர் வா. மு. சேதுராமன் நிகழ்த்தினார். மறைமலை-யடிகளார் தொண்டு, வரலாறு, ஆய்வுத்திறம், அவரிடம் நாம் கற்பவை, கொள்கைகள், தமிழுணர்வு, அவரும் அவர் வழி நாமும் என்னுந்தலைப்புகளில் முறையே முனைவர் இளவரசு, மா. சு. சம்பந்தம், முனைவர் சுந்தரமூர்த்தி, பழ. கருப்பையா, முனைவர் இ. மறைமலை, புலவர். த. சுந்தரராசன்; முனைவர். குருவிக் கரம்பை சண்முகம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள். புலவர் பி. சி. கணேசன் நன்றி கூறினார். அடுத்து மாலையில் உவமைப் பாவலர் சுரதா தலைமையில் பாவரங்கம் நடந்தது. பாவலர்கள் மா. செங்குட்டுவன், மு. மேத்தா முதலியோர் கலந்து கொண்டனர். மாலையில் மறைமலையார் வழங்கிய வருங்-காலம் என்னும் பொருள் பற்றிக் கருத்தரங்கம் நடைபெற்றது.

3. தொலைக்காட்சியில் பிற மாநில மொழித் திணிப்புக் கண்டனப் பேரணி:

சென்ற 27—3—90 செவ்வாய் மாலை 4 மணியளவில், தலை-நகர்த் தமிழ்ச் சங்கம் சார்பில், தொலைக் காட்சியில் பிற மாநில மொழித் திணிப்புக் கண்டனப் பேரணி ஒன்று, சென்னை, அண்ணாசாலை, பெள்சர் அருகிலுள்ள காயிதே மில்லத் பெண்கள்

கலைக் கல்லூரி முன்னிருந்து, தொலைக்காட்சி நிலையம் வரை பாவலரேறு.பெருஞ்சித்திரனார் தலைமையில் நடைபெற்றது.

பேரணியில், சென்னையில் உள்ள 16 அமைப்புகள் சார்பில் தமிழறிஞர், அமைப்புகளின் உறுப்பினர்கள், மாணவர்கள் மகளிர் ஆகியோர் ஏறத்தாழ இருநூற்றுவர் கலந்து கொண்டு முழக்கங்கள் இட்டபடி நடை சென்றனர்.

சென்னைத் தொலைக்காட்சி இரண்டாவது அலைவரிசையின் நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழிலேயே அமைய வேண்டும் என்றும், பிறமாநில மொழி ஆளுமையினைத் தவிர்த்திட வேண்டும் என்றும் ஒரு நீண்ட கோரிக்கை எழுதப் பெற்று, அதைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநரிடம் பாவலரேறு, பேராசிரியர் சாலையார், பேரா. இளவரசு, பெரும்பாக்கோ வா. மு. சேதுராமன், பேரா. சேது, புலவர் சுந்தரராசன், அரணமுறுவல் ஆகியோர் சென்று ஏறத்தாழ ஒரு மணி நேரம் அவரிடம் பேசி நிலைமைகளைக் கூறிக் கொடுத்தனர். பின்னர் காவலர்களால் தொலைக் காட்சி நிலையத்திற்கு ஒரு படைச்சால் (பர்லாங்) தொலைவில் நிறுத்தப் பெற்றிருந்த தொண்டர்களிடத்தில், மேற்கண்ட படிநிகராளியர், தொலைக்காட்சி நிலையத்திற்கு உள்ளே இயக்குநரிடம் நடத்திய கருத்துரைகளைப் பற்றி விளக்கினார்கள். இறுதியில் நிகழ்ச்சி அமைப்பாகிய தலைநகர் தமிழ்ச்சங்கப் பொறுப்பாளர் நன்றி கூறிய பின் அனைவரும் அமைதியாகக் கலந்து சென்றனர்.

4. ஈழ விடுதலைக்காக ஒரு கூட்டமைப்பு முயற்சி:

கடந்த 8—4—90 ஞாயிறு காலை 10 மணியளவில், சென்னை, திருவல்லிக்கேணி, நீலி வீராசாமி தெருவில் உள்ள, அரசினர் அலுவலர் சங்கக் கட்டிடத்தில், ஈழ விடுதலைக்காக ஒரு கூட்டமைப்பை அமைப்பதற்கான ஒரு முயற்சியை முகாமையான கொள்கையாளர் சிலர் மேற்கொண்டனர். அவர்களுள் வே. ஆனைமுத்து, ச. அ. டேவிட், தமிழ்க்கனல் ஆகிய மூவரும் அமைப்பாளர்களாக விருந்து அறிஞர்கள் பாவலரேறு, பேரா. இரா. இளவரசு, நித்தியானந்தன் முதலியோர் பங்கேற்குமாறு ஒரு கூட்டத்தைக் கூட்டினர். நிகழ்ச்சியில் பல்வேறு எதிரெதிரான கருத்துகளைப் பலரும் கூற, நிகழ்ச்சி இடைநின்று போனது.

5. தோழர் மாறனின் 2-ஆம் ஆண்டு வீர வணக்க நாள் (11-4-90):

கடந்த, 11—4—90 அறிவன், மாலை 6 மணியளவில், மதுரை, அரிமா விடுதியில், இந்திய வெறி அரசின் பொய்ப் பரப்புரைகளை முறியடிப்பதில் தன்னுயிர் ஈந்த தமிழ்நாட்டு விடுதலைப் போராளி தோழர் மாறனின் 2-ஆம் ஆண்டு வீர வணக்க நாள் நினைவு கூரப் பெற்றது. நிகழ்ச்சியைத் தமிழ்நாடு இளைஞர் பேரவையைச் சேர்ந்த மா. பொழிலன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி-

யில் உ. த. மு. க. முதல்வர் பெருஞ்சித்திரனார், த. தே. இ. தலைவர் ப. நெடுமாறன், த.இ.வி.க. நெறியாளர் தி. இராமதாசு, இ. மா. பொ. க. செயலாளர் பெ. மணியரசன், நீண்ட பயணம் நீ. ப. சுந்தரம், ம.க.இ.யைச் சேர்ந்த அ. மார்க்சு, மு.பே.இ.அ. வைச் சார்ந்த சிதம்பரம், 'மண்' ஆசிரியர் அறிவு மதி, த.ம.பே. வைச் சேர்ந்த இறை. பொற்கொடி, த. இ. பே. வைச் சார்ந்த கோ. சுகுமாரன், த. மா. மா. பே.வைச் சேர்ந்த தமிழ் முகிலன் அனைவரும் பங்கு பெற்றனர். நிகழ்ச்சி இரவு 10·30 மணியளவில் நிறைவுற்றது.

6. முத்தமிழ்க் கழகம், திருமுதுகுன்றம் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டுத் தொடக்க விழா:

சென்ற 14—4—90 காரிக் கிழமை மாலை 7 மணியளவில் திருமுதுகுன்றம், தென்கோட்டை வீதி, நகராட்சி நடுநிலைப் பள்ளி, திருவள்ளுவர் அரங்கில், பாவேந்தர் நூற்றாண்டுத் தொடக்க விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் திருமுதுகுன்றம் கலைக்கல்லூரி, தமிழ்த்துறைத் தலைவர் பேரா. சி. குறிஞ்சிச் செல்வன் அவர்கள் தலைமை தாங்கினார். புதுப்பேட்டை ந. ந. நி. பள்ளித் தலைமையாசிரியர் கி. கலைமணி முன்னிலை தாங்கினார். நிகழ்ச்சியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், திரைப்பட உருவாக்குநர், பழ. கருப்பையா, தமிழ்த்திருவாளர்கள், சே. நா. விசயராகவன், பாவலர்அறிவுமதி, வீர. தர்மராசன், ஆகியோர் பங்கு கொண்டு கருத்துரையாற்றினர். இறுதியில் சிறுவன் திருமாவளவன் அழகிய சொற்பெருக் காற்றினார். அவருக்கு ஒரு தூவல் பரிசு வழங்கப் பெற்றது. நிகழ்ச்சியைப் பொதுச் செயலாளர் சா. இராசசேகரன் ஏற்பாடு செய்திருந்தார்.

7. பயிற்றுமொழி பைந்தமிழே!-பொதுக்கூட்டம்!

சென்ற 16-4-90 அன்று, மாலை 7 மணியளவில், புதுக்கோட்டை, நகர்மன்றத் திடலில், பயிற்றுமொழி பைந்தமிழே என்னுந்தலைப்பில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வருவாய்த்துறையைச் சார்ந்த க.செல்லையா தலைமை தாங்கினார். வீட்டு வசதி வாரியம் ச. கலியமூர்த்தி, இந்தியன் ஓவர்சீசு வைப்பகம் மா. இலக்குவன் இருவரும் முன்னிலை தாங்கினர். திரு. இராமதாசு வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், பாவலரேறு பெருஞ்சித்திரனார், திரைப்பட உருவாக்குநர் பழ. கருப்பையா, இரா. பாவாணன், சி. தமிழ்க்குமரன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில், புலவர் கும. திருப்பதி நன்றி கூறிட, நிகழ்ச்சி இரவு 11 மணியளவில் நிறைவுற்றது. இரவு விருந்து, நண்பர்கள், வெளியூர் அன்பர்கள் அனைவருக்கும் திரு. இரா. பாவாணன் அவர்களால் அவர்கள் இல்லத்தில் வழங்கப்பெற்றது.

8. காரைக்குடி-தமிழர் பாசறைத் தொடக்கவிழா:

கடந்த 17-4-90 அன்று மாலை 6·00 மணியளவில், காரைக்குடி, சுநீதா அரங்கத்தில், தமிழர் பாசறைத் தொடக்கவிழா நடைபெற்றது' அதில் 'என்னங்கடா தேசியம்' என்னும் தலைப்பில் அறிஞர்கள் பலர் கருத்துரை ஆற்றினர். நிகழ்ச்சிக்கு திரு. சே. நா. விசயராகவன் தலைமை தாங்கினர். நகர் மன்றத் தலைவர் சித. சிதம்பரம் தொடக்கவுரை யாற்றினர். அறிஞர்கள், கி. ஆ. பெ. விசுவநாதன், பாவலரேறு, பெருஞ்சித்திரனர், வி. நெடுமாறன், பழ. கருப்பையா, புலவர் ஆ. பழநி ஆகியோர் கருத்துரையாற்றினர், நிகழ்ச்சி இரவு 10-30 மணியளவில் நிறைவுற்றது. அறிஞர்கள் அனைவர்க்கும், இரவு விருந்து பழ. கருப்பையா அவர்கள் இல்லத்தில் வழங்கப் பெற்றது.

9. மதுரை-தமிழர் பாசறைப் பொதுக் கூட்டம்:

சென்ற 18-4-90 அறிவன் மாலை 6-30 மணியளவில் மதுரை, தமிழ்ச் சங்கத் திடலில், தமிழர் பாசறைக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கரு. சிதம்பரம் தலைமை தாங்கினர். தி. அசோகன் வரவேற்புரையாற்றினர். 'எழுக தமிழினமே' என்னுந் தலைப்பில், திருவாளர்கள் பழ. நெடுமாறன், பாவலரேறு பெருஞ்சித்திரனர், பழ. கருப்பையா, சே. நா. விசயராகவன் ஆகியோர் கருத்துரையாற்றினர்கள். இரவு 11-30 மணியளவில், சி. இராதாகிருட்டிணன் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

விரைவில் வெளிவரவிருக்கிறது!

பாவலரேறு பெருஞ்சித்திரனரின்

அரிய கருத்துரைகள்
அடங்கிய கருவி நூல்!

தமிழீழப் போராட்டத்தின் முழுவடிவமும்,
போராளிகளின் முயற்சிகளும், சிங்கள,
இந்திய அரசியல் சூழ்ச்சிகளும்
உள்ளடங்கிய அரிய நூல்!

தமிழீழம்

(போராளிகளும், போராட்ட முயற்சிகளும்)

1970 முதல் இதுவரை ஆசிரியர் தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றில் அவ்வப்பொழுது எழுதிய அரிய கட்டுரை பாடல்களின் தொகுப்பு! ஏறத்தாழ 300 பக்கங்கள் கொண்டது!

30 உருபா மதிப்புள்ள நூல்! முழுத்தொகையும் முன்னதாக அனுப்பிப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு நூல் வெளி வந்தவுடன் இலவயப் பதிவஞ்சலில் அனுப்பிவைக்கப் பெறும்.

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழின் ஏற்றமே தம்மால்தான் என்றெல்லாம் தருக்கித்திரியும் தரங்கெட்டதுகள் எல்லாம், பொய்யெனும் பட்டாடையின் மினுக்கித் திரிகையில், அன்றும், இன்றும் கொண்ட கொள்கையில் சற்றும் பிறழாது, எண்ணத்தில் எழிலான குறிக்கோள் கொண்டு, உண்மையெனும் கந்தலாடையுடன், காட்சியளிக்கும் தங்கள் தோற்றம் புகழ் வாய்ந்தது அல்ல என்றாலும், இயற்கை அன்னையின் கண்முன் எழிலானதே! பெருமையானதே! குயிலின் இசையும், மயிலின் ஆடலும், மானின் துள்ளலும், மழலையின் புன்னகையும் செயற்கையானவை அல்ல! இன்பமானவை; இயற்கையானவை. எனினும் துன்பக்காற்றில் வறுமை நெருப்பில் தாங்கள் படும் துயரம் அந்தப்பாடல் வரிகள்:

பொய் மாந்தர் நடுவினிலே மெய்ம்மை பேணிப்
போராடும் நெஞ்சினையேன் எனக்குள் வைத்தாய்?
அன்பவிந்த கல்நெஞ்சர்க் கிடையில் அன்பை
அணைகட்டித் தேக்குமொரு நெஞ்சேன் தந்தாய்?
இறைவா!...''என்ற பொன்வரிகள், கண்ணீர்வரிகள்

இம்மண்ணுலகில் பத்துப் பேர்களின் காதிலும் ஒலிக்காது போவது காலத்தின் போகூழே! தமிழின் அளப்பரிய இழப்பே! கோடி அமைச்சர்களாலும் இதனை ஈடு செய்ய இயலாத 'இன்னாத உலகம் இது'. என் செய்ய இயலும்? அன்புள்ள

—அருள்மணி, பெங்களூர்-51.

O : 1425 : அன்பு ஊழ்த்த தோழமையீர் வணக்கம். தென்மொழி சுவடி 25 : 7 : 2 பக்:—தோளன் > தோழன் ''ள > ழ'' என்று காட்டும் முறை சீரியதன்று; சங்கக் காலத்து ளகர ழகர வேறுபாட்டு அறிவு சிறந்தோங்கியது. அவ்வாறு ஓங்கிய நிலை தொன்மையிலிருந்து தொடர்ந்து சங்கக் காலத்திற்கு வந்தது. கோடிச் சொல்கள் ஊழ்த்தன. ஊழ்தல் = மலர்தல், முதிர்தல். இவை அடிப்படை முதன்மைப் பொருள். ஓழ் > தோழ். த் + ஓழ் = தோழ் ஓழ் = ஒரொத்துப்போ. மேலும் காண்க. ஆளம் ஆழம்—காளம்—காழம்; வீளை—வீழை; ஊளை—ஊழை; கூளை—கூழை—முதலிய சொல்களின் வேறு வேறு ஆனவை. இவ்வாறு தோளன்—தோழன்—வேறு வேறு வேர்காட்டுக. வேர் நிலையிலும் 'ள-ழ' வேறுபாடு உண்டு. இது தமிழின் உயிர். அகத்திணைப் புணர்ச்சித் துணைவன்—தோழன். சிரிப்பாக உள்ளதா? சிரிப்போம்! —வீ. ப. கா. சுந்தரம்

தமிழிசையன்-பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி 620024

O : 1426 : பேரன்பு சால் ஐயா; வணக்கம், யான் திங்கள் தோறும் பத்து உருபா அனுப்புவதாக மூன்று நீங்கள் அனுப்பி இடையில் இயலாமல் நின்று போய்விட்டது. எனினும் தங்களின் உயரிய தொண்டிற்கும் கொள்கைக்கும் என்றும் எம் நன்றியையும், ஆதரவையும் இதன் வழி தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமக்கு ஐம்பத்தொன்பது ஆண்டுகள் நிறைவெய்தியமை நினைவாகவும் வீழ்ந்த பேரினம் எழுந்து வீறுநடை போட்டிடத்

தங்கள் தொண்டு தொடர்ந்திடவும் இச்சிறு தொகையான உரு; 50 ஐ விடுத்துள்ளேன்,

மற்று, அப்பாத்துரையார் பன்மொழிப் புலவரேயெனினும், தென்மொழிப் புலமையில் வல்லவர் என்பதை அவர் தம் நூல்கள் வழியும் உரை வழியும் உணர்ந்துள்ளோம். அவர் நூல்கள் நம் இனத்திற்கு விழிப்புணர்வை யூட்டுபவை. இனத்தை இனம் தான் காக்கும்; காக்கவேண்டும். நம் இனத்தை வேற்றினம் காக்க இயலாது; காக்கவும் மாட்டார்கள். ஆகவே, அவர் குடும்பத்திற்கும் இன்று பணவிடை வழி உரு. 50/- ஐம்பது விடுத்துள்ளேன் இரண்டாம் முறையாக. இன்னணம், அன்பின்,

—மு. தமிழ்நெஞ்சன், துறையூர்

O : 1427 : பேரன்பின் பெட்டகமே! அன்பின் இனிய ஐயா அவர்களுக்கு வணக்கம். நலமே விளைய இறைவனை நாளும் வேண்டுகிறேன். கவடி 25 ஓலையிட்ட பாவேந்தர் நூற்றாண்டு-இன்றைய நிலையில் மிக மிகப் பொருத்தமே.பாவேந்தர் கொள்கை என்னவென்று தெரியாதவர்களெல்லாம் இன்று விழா கொண்டாடுகிறார்கள். அழைப்பிதழில் பணம் யார் அதிகமாக கொடுக்கிறார்களோ அவர்களின் பெயர் முதல் பக்கத்தில் பெரிய எழுத்தில் இருக்கும்.இது தான் இன்றைய பாவேந்தர் நூற்றாண்டு விழா பாவேந்தர் உண்மைத் தொண்டர் என்றும் புறக்கணிக்கப்படுகிறார். தமிழுக்குத் தொண்டு செய்பவர்கள் வறுமையில் வாடக் காரணம் என்ன? இதுதான் தமிழின் மறுபக்கமா?

—செல்வி. பெ. குறிஞ்சி, மூர்த்திக்குப்பம்.

சேரன் செங்குட்டுவன் கட்டிய கண்ணகி கோயில்!

1971-ஆம் ஆண்டு தி. மு. க. ஆட்சியின் போது, அன்றைய முதல்வர் கருணாநிதி, கேரள அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் "கண்ணகி கோயில் கேரளத்தில் உள்ளது. அதைத் தமிழகத்திற்குத் தரவேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் குறிப்பை வைத்துக் கொண்டுதான் மதுரை மாவட்டத்தில், தமிழகம், கேரளம் எல்லையில் உள்ள கண்ணகி கோயிலுக்குக் கேரள அரசு சொந்தம் கொண்டாடி வருகிறது என்று சொல்லப்படுகிறது.

இந்தக் கோயிலில் உள்ள கண்ணகி சிலையின் கல்தான் சேரன் செங்குட்டுவனால் இமயமலையிலிருந்து, ஆரிய மன்னர்களான கனக, விசயன் தலைகள் மீது சுமந்து கொணரப் பெற்ற கல். இக்கல்லை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்களும் இக்கல் இமயமலையிலிருந்து கொணரப் பெற்ற கல் என்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

O

O : 1421 : பேரன்புடையீர்! வணக்கம்; தங்கள் 4-5-90 அன்று விடுத்தமடல் கிடைக்கப் பெற்றுப் பெருமகிழ்ச்சியடைந்தேன்; தங்கள் வேலைகளுக்கிடையில் அவ்வளவு விரைவாக விடை எழுதியமைக்கு மிக்க நன்றி. நான் இத் திங்கள் முதல் தென்மொழியின் வளர்ச்சிக்கு என்னால் இயன்ற சிறு உதவியாக திங்கள் தோறும் உருபா இருபது (உரு: 20/-) அனுப்பலாம் என்று முடிவு செய்து, இன்றே அத்தொகையினைத் தங்களுக்கு அனுப்புகின்றேன். இத்துடன் தமிழ்ச்சிட்டு ஆண்டுக் கட்டணத்தொகை உரு; 12-00ம் சேர்த்து அனுப்புகின்றேன்; மேலும் என் இல்லத்திற்கு ஒரு தூயதமிழ் பெயராக ''தென்றலகம்'' என்று வைக்க இருக்கின்றேன்; இப்படி வைக்கலாமா; அருள்கூர்ந்து தெரிவிக்கவும். நானும் என் துணைவியாரும் கடந்த இருபது ஆண்டுகளாக நல்லதொரு தமிழ்க் குடும்பமாக, ஒரு பிள்ளை (18 அகவை), ஒரு பெண் (15 அகவை) பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றோம். தங்களை வைத்தே என் பிள்ளைகளின் திருமணத்தையும் முடிக்க விரும்புகின்றேன்; அனைத்தும் தூய தமிழிலேயே இருக்க விரும்புகின்றேன். இதில் கலப்பு இருப்பின் மன்னிக்க வேணடுகின்றேன்.

இரா. துரைராசு குரோம்பேட்டை, சென்னை.

O : 1422 : பேரன்பிற்கினிய அய்யா! வணக்கம்! தங்களின் முடங்கல் கிடைக்கப்பெற்று மட்டிலா மகிழ்வெய்தினேன்... தங்களின் மடலில் 'தகுதி நிலைக்கேற்ப' என்ற சொல் என்னை உறுத்திவிட்டது; பெரியார் பாசறையில் பயின்ற தென்மொழித் தொண்டனுக்கு என்ன தகுதி வேண்டி இருக்கிறது? ஒரு தென்மொழித் தொண்டனுக்கு ஆயிரமாயிரம் பண்டாரகர் பட்டம் கொடுத்தாலும் இணையாக முடியுமா? தென்மொழித் தொண்டர்கள் ஏழைகளாக இருக்கலாம்! ஆனால் கோழைகள் அல்லர்! மற்றை இனத்தார்க்கே மண்டியிடான்; மண்டி இட்டால் அவன் மூல வித்தாக இருக்கமாட்டான்! இது தென்மொழி பயிற்றுவித்த பாடம்! என்னை இந்நிலைக்கு உயர்த்தியதே என் அன்னை தென்மொழிதானே! அவளை நான் கடுகளவேணும் தினையளவேணும் உயர்த்தவேண்டாமா?

அகவை முதிர்ந்துவிட்ட காரணியத்தாலும், புறத்தாக்கங்களாலும் தென்மொழி எனக்கெழுதிய மடலில் தளர்வு தோன்றியதோ? ''தகுதி நிலைகளுக் கேற்ப'' என்று எழுதிய இந்த உணர்வு ஏன் எப்படி ஏற்பட்டது? பெரியார் வழியை விட்டுச் சற்று விலகினாலும் அப்படித்தான் தோன்றும்! பல்லாயிரக்கணக்கான தனித்தமிழ்—பெரியார்-மறவர்களை உருவாக்கிய பெருமை தென்மொழியை மட்டுமே சாரும். இந் நிலவுருண்டையையே தூக்கிக் கையில் கொடுத்தாலும், தென்மொழிக்கு நிகராகாது! எனவே தென்மொழி இட்டவித்து மூலவித்து! எனவே இந்தத் தென்மொழி மறவன் கிஞ்சிற்றும் கவலைப்படமாட்டான் என்பதைத் தென்மொழிக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்...கி.பி. 2000-இல் தமிழ் இதழ்களின் வளர்ச்சி—தென்மொழியைப் பற்றிய முழு ஆய்வு-எழுதத் திட்டமிட்டுள்ளேன்; மற்றவை நேரில்!

இறையருளை எதற்கு இன்னும் கட்டி அழுது கொண்டு இருக்கிறீர்கள்? அதென்ன, சோறுபோடுகிறதா? பெரியாருக்கும் பாவேந்தருக்கும் இல்லாத இறையருள் அதெப்படி உங்களிடம் ஒன்றியுள்ளது? மாந்தநேயமற்ற சிவனிய மாலிய மதக்கருத்துகளைத் தூக்கிக் குப்பைக் கூடையில் போடாதவரைக்கும், பெரியார் போல வரமுடியாது. யாரை நிறைவுபடுத்த, சில பண்டாரப் பயல்களின் விருப்பத்தின் பேரில் எல்லாவற்றிற்கும்

அப்பாற்பட்ட தூய்மையான தென்மொழியில் மதநஞ்சை எழுதுகிறீர்கள்? அன்பின் ஐயா,

தமிழியல் துறைத் தலைவர் அய்யா அறவாணன், நூற்றாண்டு விழாக்குழுவில் இருந்து தாங்கள் விலகியதாக என்னிடத்தில் சொன்னார், தங்கள் அறிக்கையைக் 'குறளிய'த்தில் கண்ணுற்றேன். அரசியல் புரட்டர்களின் ஆள் மாற்றி வேலையைத் தாங்கள் முன்னமே அறிந்தவர்தாமே! தொடர்ந்து வரும் ஆட்சியாளர்களால் தமிழும் தமிழறிஞர்களும் புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர் என்பது நாடறிந்த உண்மை! தென்மொழிக்கென்று ஒரு நீண்ட நெடிய வரலாற்றை உருவாக்கிவிட்டீர்கள்; திருக்குறளுக்கு மெய்ப்பொருளுரை எழுதி என்று வெளியீடுகிறீர்களோ அன்றுதான் தமிழுக்குப் பொன்னாள்!

— மு. உலகமுதல்வன் க.மு. (இல); க.மு. (வர), (க.மு. அர) புதுச்சேரி-14.

O : 1423 : அன்பார்ந்த அய்யா, அவர்களுக்கு, வணக்கம்.

அய்யா இந்தத் திங்கள் முதல் எனது "தமிழ்ச்சிட்டு" ஆண்டுக் கட்டணத்தைப் புதுப்பித்துள்ளேன். ஆண்டுக் கட்டணத் தொகையாக உருபா 25/- மட்டும் அனுப்பி உள்ளேன்.

இக்கால் ஓர் எளிய திரைப்பட நடிகனின் பெயரில் வெளி வரும் ஓர் இதழின் விலைகூட உருபா 5 (அல்) 6. இதனையும் விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் அன்பர்களை எண்ணும் போது மனம் புண்ணாகின்றது. நல்ல கருத்துகளைக் கொண்டு இயங்கும் 'தமிழ்ச்சிட்டு' ஓர் இதழின் விலை உருபா 1. இதனை வாங்கிப் படிக்கும் அன்பர்களும் சிலரே.

மேலும் அய்யா, அவர்கள் இதழ்களின் ஆண்டுக் கட்டணத்தை, தமிழ்ச்சிட்டு $2 \times 12 = 24$ எனவும், தென்மொழி $4 \times 12 = 48$ எனவும் உயர்த்துங்கள். எனது தமிழ்ச்சிட்டின் ஆண்டுக் கட்டணமாக உருபா 25/- அனுப்பி உள்ளேன். இதனை மறுக்காமல் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன். தவறாக இருந்தால் மன்னியுங்கள். அன்புடன்,

க. பாபுராசு என்ற க. தமிழன்பன்-பெங்களூர்-21.

O : 1424 : தென்றமிழ்ச் சோலையின் நன்மலரே!

வணக்கம்! வாழி. இன்றமிழ்-மொழிக்கும் நம் இனத்திற்கும், நாட்டிற்கும் மட்டுமல்லாது, இம்மண்ணுலக மக்களுக்குத் தேவையான அன்பையும், அறிவையும், மானத்தையும், வீரத்தையும், பண்பையும், புகழையும் எந்த ஒரு மொழியின் புலவனும் தங்களைப் போன்று, இன்று வரை இயம்பியிருக்க முடியாது. இயற்றியிருக்க முடியாது. ஏன், தொன்மைத் தமிழ் இலக்கியங்களில் உள்ள பல புரட்சிகரப் பாடல்களினும் தங்களின் பாடல்கள் மேன்மையானவை; மாண்புடையவை; மாசற்றவை! அவை நிலத்திற்கு நீர் போன்றும், நீலவானத்திற்குச் சுடர் போன்றும், கண்ணிற்கு ஒளிபோன்றும், புண்ணிற்கு மருந்து போன்றும் அமையும் தண் தன்மையுடையன இஃது உண்மை! பொய்யுரையன்று; புகழுரையன்று; புனைந்துரையுமன்று! தம்மையும் தம் குடும்பத்தையும் என்றென்றும் ஏற்றமுடன் காத்துக் கொள்ளத் துடிதுடித்துக் கொள்கை, 'தாணம்' குறிக்கோள் எல்லாவற்றையும், பட்டம், பதவி, பணத்திற்கு என்று விலை போக்கித் தாம் தாம் தமிழ், தம்மால் தான் தமிழ்,

(தொடர்ச்சி உள்ளே 31-ஆம் பக்கம்)